தென்மொழி

சுவடி: 7

ஓலை: 7.

விலை 75 காசு.

ஊரைத் திருத்துமுன், உலகைத் திருத்துமுன்
உன்னைத் திருத்தடா தமிழா—நீ
உன்னைத் திருத்தடா தமிழா!

பாரைத் திருத்திடல் நல்ல முயற்சியே!
பாட்டனும் பூட்டனும் செய்த பயிற்சியே!
யாரைத் திருத்தினர்; யாது வளர்ச்சியே?
யாங்கணும் யாங்கணும் வாழ்க்கை தளர்ச்சியே!
(ஊரைத்)

வேரைத் திருத்துதல் பயனளித் திடலாம்!
வினையைத் திருத்திடும் முயற்சியோ கடலாம்!
கூரை திருத்தினால் நிற்குமோ சுவரே?
குழியைத் திருத்தாமல் இருப்பது தவறே!
(ஊரைத்)

உலகைத் திருத்திட வலம்வரு கின்றாய்!
உன்னைத் திருத்தெனில் உள்ளம்நோ கின்றாய்!
அலகிலா முயற்சிகள் அறங்கள், சட் டங்கள்
ஆரைத் திருத்தின? பணயம்கட் டுங்கள்!
(ஊரைத்)

ஆயிரம் ஆண்டுக்கு முன்னும் இருந்தனர்;
அம்மண மாகவே உண்டு திரிந்தனர்;
ஏயின திருத்தங்கள் என்னென்ன கண்டாய்?
எழிலுடை! தலைமயிர்! மற்றென்ன விண்டாய்?
(ஊரைத்)

வெள்ளுடை மேனியில் புரள்வதோ நேர்மை?
விரிமயிர் வாரி முடித்தலோ சீர்மை?
உள்ளத்துள் கள்ளமும் கரவும் கிடப்பதா?
ஊரினை ஏமாற்றி, மறைந்தே நடப்பதா?
(ஊரைத்)

பொதுமையைக் காணாத உளம்என்ன உளமோ?
பூசலை விளைத்திடும் வளம்என்ன வளமோ?
புதுமைஎன் றுரைப்பது செல்வர்க்குச் செழிப்பு!
போக்கற்ற ஏழையர்க் கேதுஅதால் விழிப்பு?
(ஊரைத்)

மன்றங்கள் எத்தனை? எத்தனைக் கோயில்?
மடிபவர் எத்தனைப் பேர் தீமை நோயில்?
இன்றைக்கும் நேற்றைக்கும் வேற்றுமை யாது?
இழிவினை, அழகினால் மூடல்ஆன் றேது?
(ஊரைத்)

கல்வியும் செல்வமும் ஓங்குதல் மேலோ?
கணக்கிலா இழிவுகள் குவிதல்எப் பாலோ?
சொல்,வினை உளத்தோடு பொருந்துதல் வாழ்வே!
சொக்கட்டான் காய்போல உருளுதல் தாழ்வே!
(ஊரைத்)

www.thamizham.net - Free E book No 7418

நமக்கு வந்த மடல்கள்.

143: இத் திங்கள் "தென்மொழி"யில் எங்கள் மருத்துவம் குறித்துத் தாங்கள் எழுதியிருந்த "தமிழக தமிழ் மருத்துவம்" கட்டுரையைக் கண்டேன். தமிழ் மருத்துவத்தின் மூலம், வரலாறு, இடைக் காலத்தில் ஏற்பட்ட பல்வேறு இடர்ப்பாடுகள், எதிர்ப்புகளிலும் துவளாத அதனுடைய எஃகு நடை, தமிழக அரசு தரவேண்டிய துணை— இவை குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் எழுதியிருந்தது கண்டு பூரிப்பும் பெருமிதமும் அடைகிறேன். தமிழ் மருந்துவ மாணவன் என்கின்ற அளவில் சிறப்புமிக்க இந்த ஆசிரியவுரையை வெளியிட்ட தங்கள் அருளுக்கும் கனிவிற்கும் எங்கள் நன்றி.

—புது. செயப்பிரகாச நாராயணன், பாளையங்கோட்டை.

144:

சங்கம் முழங்கிய பாரதி தாசனின்
பொங்கு விழாவிற் புகன்ற பாவுரை
தெங்கின் இனியது; தேமா வனையது;
பைம்பொன் போன்றது; வெற்றுரை அன்றே!
இத்தகு சீற்றம் பொதிந்த நும்முரை
செத்திடு தமிழனின் செவியினில் ஏறிடில்
சிற்றுருப் பார்ப்பினை ஓட்டப்
பூட்டுவாள் திறந்து விரைகுவன் அன்றோ!

—ம. பொன்னிறை-அறி. இ., பழநி.

145: "மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்ற பாரதியாரின் கூற்று எங்கே மெய்யாகி விடுமோ என்று அஞ்சிய வேளையில் தங்களின் "தென்மொழியும்" "தமிழ்ச்சிட்டும்" தோன்றித் தமிழ்ப் பற்றும் தமிழுணர்வும் மாணவர் மனத்தில் தோற்றுவித்தது ஆற்றுதற்கரிய செயலாகும். நல்வழி காட்டும் தங்கள் ஏட்டிற்கு இற்றைப் பொழுது நாட்டில் பெருத்த வரவேற்பு இல்லையாயினும் எம்போலும் அன்பர்கள் தங்கள்பால் உள்ளவரையில் தாங்கள் எதுபற்றியும் கவலல் வேண்டா.

—ஆ. காசி. பள்ளிஇறுதிநிலை, திருப்பாலப்பந்தல்.

146: கோவைக்குத் தாங்கள் வந்தபோது தங்கள் உண்மை நிலை அறிந்தேன். அன்று முதல் மனத்தில் மிக்க கவலையுடையவனேன். 'கலைஞர்' அரசும் தென்மொழிக்குத் துணையாக இல்லாதது குறித்து வருந்தினேன். ஆயினும் 'தென்மொழி'யின் நிலைகுறித்து ஒவ்வோர் இதழிலும் எழுதுவது தேவையா என எண்ணுகிறேன். எப்படியாவது இதழ் நன்கு நடைபெற முயற்சி எடுத்துக் கொள்ளல் தேவைதான். 'தென்மொழி' வந்தவுடன் படிக்கத் தூண்டுகிற ஆர்வம் படித்தவுடன், 'தென்மொழி' நலமில்லா நிலைகுறித்த வருத்தத்தால் குறைந்து போகிறது. தென்மொழி வளர-'எவ்வழியாயினும்' கையாளல் நன்று எனக் கருதுகிறேன். பிரஃச்யா (Prussia)வின் பிரடரிக் தனது நாட்டு வளர்ச்சிக்காக, நல்ல அல்லது கெட்ட எந்தவழியையும் பயன்படுத்தத் தயங்காததைப்போல, அரசைச் சார்ந்து கொஞ்சம் எழுதுவதால் தென்மொழிக்குத் துணை எனத் தெரியுமெனில்,

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்.

www.thamizham.net - Free E book No 7418

தென்மொழி

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 7: ஓலை 7.

மடங்கல் தி. பி. ௨000 (1969. -ஆ.:.ச்டு-செப்டம்பர்.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

பொதுவுடைமை ஒரு நாட்டின் தனியுடைமை அன்று!

பொதுவுடைமை என்பது முற்றும் பொருளியல் சார்ந்த ஒரு கொள்கையே ஆகும். ஆனால் ஒரு நாட்டின் உடைமைகள் யாவும் அரசைச் சார்ந்தே இயங்கவேண்டி யிருத்தலின், பொதுவுடைமை என்னும் பொருளியல் கொள்கையும் ஓர் அரசியல் கொள்கையே என்று கருதப்பெறும். எனினும் இரண்டு கொள்கைகளும் மக்கள் நலம் பற்றியே அமைந்தனவாகலின் இரண்டும் குமுகாயக் கொள்கையின் உட்கிடைக்கொள்கைகளே ஆகும். பொதுவுடைமையைப் புறக்கிடையா கவும் அகக்கிடையாகவும் கொண்டு கூறப்பெறும் Socialism, Communism என்னும் இரண்டு ஆங்கிலச் சொற்களும் Society, Community எனும் குமுகாயப் பொருளுடைவுச் சொற்களையே

www.thamizham.net - Free E book No 7418

அடிப்படையாகக் கொண்டிருத்தல் கவனத்திற் கொள்ளத்தக்கது குமுகாயம் இன்றி அரசியலும் இல்லை; அரசியலின்றிப் பொருளியலும் இல்லை. ஆனாலும் இக்காலத்தில் பொருளியல் சார்ந்த பொதுவுடைமைக் கொள்கை என்பது தனிப்பட்ட ஓர் அரசுக்கே–ஒரு நாட்டிற்கே உரிய ஒரு கொள்கை போலவே பேசப்பட்டும் கருதப்பெற்றும் வருகின்றது. பொதுவுடைமை என்னும் சொல்லைக் கேட்டமட்டிலேயே நமக்கு உருசியாவும் சீனாவும் நினைவிற்கு வருவதும், அஃதோர் அயல்நாட்டுக் கொள்கைபோல் தோன்றுவதும் அக்கருத்தின்பாற்பட்ட மயக்கத்தாலேயே யாம். தேவையானால் அம்மயக்கத்திற்கும் காரணியம் ஒன்று கூறலாம். இந்த இரண்டு நாடுகளில்தான் இக்கொள்கை முதன் முதலில் நன்கு ஆய்ப்பெற்று, அரசியல் வடிவாக ஏற்கப் பெற்றுச் சட்ட முலாம் பூசப்பெற்று, நடைமுறைக்குக் கொண்டுவரப் பெற்றது. இக்கொள்கையை உலகில் முதன்முதல் அரசியலளவாக ஏற்றுக் கொண்டவர் உருசியரோ சீனரோ ஆகலாம். அதனால் இக்கொள்கை அவர்களுடைய கொள்கையே யென்று ஆகிவிடாது. இக்கொள்கையைப் பின்பற்றுவோரெல்லாரும் அவர்களுக்குக் கட்டுப்பட்டவராகவும் ஆகிவிடார். மக்கள் வளர்ச்சியில் எக்காலத்தில் குடும்பங்கள் அமைந்தனவோ, அக்காலத்திலேயே இக்கொள்கை வேரூன்றத் தொடங்கிவிட்டது. ஒரு குடும்பத்தில் உள்ள எல்லாருக்கும் அக்குடும்பச் சொத்துகள் யாவும் பொதுவானவை என்று கருதப்படுவதைப் போலவே, குமுகாயத்தில்–ஒரு நாட்டில் உள்ள மக்கள் எல்லாருக்கும் அந்நாட்டில் உள்ள சொத்துகள் யாவும் பொதுவானவையாகக் கருதப்பட வேண்டும் என்பதே இப் பொதுவுடைமைக் கொள்கையின் மையக்கருத்தாகும். எனவே ஒரு சரியான நாட்டு அரசியல், அல்லது ஒரு சரியான குமுகாய அமைப்பொழுங்கு எந்த இனத்தால் முதன்முதல் அமைத்துக் கொள்ளப்பெற்றதோ அந்த இனமே இக்கொள்கையை முதன்முதல் செயல்படுத்தத் தொடங்கிய இனமாகும். இந்த வுண்மையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், உருசியர்களும் சீனர்களும் இந்தக் கொள்கையைப்பற்றி ஏதும் அறிந்திராத ஒரு மிகப் பழங்காலத்திலேயே, உலகத் தொல் குடியாகிய தமிழ்க்குடிதான் இக்கொள்கையை முதன்முதல் பின்பற்றியதாகப் பெருமைப்பட்டுக்கொள்ள இடமுண்டு. ஆனால் நாட்டின் பருப்பொருளாகிய உடைமைகளே தனிப்பட்ட எவருக்கும் உரிமை யுடையனவாகக் கருதப்படக்கூடா வென்னுமிடத்து, அவ்வாறு சமைக்கப்பெற்ற நுண்பொருளாகிய ஒருகொள்கை தங்கட்கே உரியது என்பது நகைப்பிற்கே இடந்தரும் என்பதுடன், அக்கொள்கைக்கே அஃது இழுக்காக முடியும் என்க.

இனி, பொதுவுடைமை என்னும் கொள்கையை அகநோக்காகச் சிறிது நோக்குவோம். உடைமைகள் இரண்டு. ஒன்று தனியுடைமை;

www.thamizham.net - Free E book No 7418

மற்றொன்று பொதுவுடைமை. நாம் விலைகொடுத்து வாங்கிய வீடு நம்மின் தனியுடைமை. நம்மை ஆளும் சட்டமன்றக் கட்டிடம் நம் எல்லாருக்கும் உரிய பொதுவுடைமையாகும். அஃதாவது நம்முள் எவருக்கும் தனி உரிமை உடையதன்று. ஆட்சியளவாக இவ்வுடைமைகள் தனியுடைமையும் பொதுவுடைமையும் ஆகுமெனினும், இவ்வுலகத்தையும், அதில் வாழும் மக்களையும் கருதலளவாக எண்ணிப் பார்க்குமிடத்து, நாம் விலைக்கு வாங்கிய வீடும், நம் பொருட்டாக நம் எல்லாரின் வரிப் பணத்தினின்றும் கட்டப்பெற்ற சட்டமன்றக் கட்டிடம் போல நம் எல்லாருக்கும் பொதுவானதாகவே கருதப்பட வேண்டும் என்பதே பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படைக் கூறுபாடாகும். இங்குதான் தனியுடைமையும் பொதுவுடைமையும் ஒன்றையொன்று எதிரெதிராகக் கருதிக்கொள்ள வேண்டிய கருத்துக் குழப்பம் ஏற்படுகின்றது. நம் வீடு, நாம் ஈட்டிய பணத்தைக்கொண்டு நமக்காக நாமோ அல்லது நாம் தந்த கூலியைப் பெற்றுக்கொண்டு கட்டிட வல்லுநரோ கட்டியது. இதற்கெனச் செலவழிக்கப்பெற்ற முழுப்பணமும் அல்லது பொருளும் நாம் தனிப்பட உழைத்து ஈட்டியதே. இஃது எப்படி நம்மைப்போல் தம் கையிலுள்ள பணத்தை இதற்கெனச் செலவழிக்காத பிறர்க்கும் உடைமையாகும் என்பது தனியுடைமையின் கேள்வி. ஆனால் பொதுவுடைமைக் கொள்கை கூறுவது வீட்டைக் கட்டிய முயற்சி பற்றியதே அன்று; அவ்வீட்டை நாம் கட்டிக்கொள்ள நமக்கு எப்படி அந்த அளவுப் பணம் அல்லது பொருள் கிடைத்தது என்னும் அடிப்படை பற்றியதே. பணம் நாம் ஈட்டியது. நம் அறிவைக்கொண்டு நம் திறமையை விலைபோக்கி நம் உழைப்பைப் பொருளாகவோ, பணமாகவோ மாற்றியதால் வந்தது என்று தனியுடைமைக் கொள்கை பேசலாம். ஆனால் பொதுவுடைமைக் கொள்கை அதற்கு மேலும் உட்சென்று, நம்மைப் போல் உள்ள பிறரும் அவ்வாறு தம் உழைப்பால் ஈட்டவியலாத பொழுது நமக்குமட்டும் இவ்வீட்டம் எப்படி வந்தது; ஒன்று, நாம் பிறர் போலன்றி ஏதோ ஒருவகையில் தவறாக மக்கள் அமைப்புக்கு மாறாக உழைத்துப் பொருளீட்டியிருத்தல் வேண்டும்; அல்லது, பிறரது போலவே உள்ள நம் உழைப்புக்கு மட்டும் இவ்வளவு வருவாய் வரும்படி இம் மக்களமைப்பில் எங்கோ ஓரிடத்தில் பிழை யேற்பட்டிருத்தல் வேண்டும்; அந்தப் பிழைகளை நாம் சரி செய்து விடுவோமானால் நம் உழைப்புக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கின்றதோ அதே வருவாய் நம்போல் உழைக்கும் ஒருவருக்கும் கிடைக்கும் அன்றோ என்று பொதுவுடைமைக் கொள்கை பேசுகின்றது. இங்கும் தனியுடைமை விடவில்லை; நம்போல் உள்ள ஒருவனைவிட நாம் மிகுதியாக உழைத்து மிகுதியாகப் பொருள் சேர்த்திருக்கக் கூடாதா என்று மேலேறிப் பேசுகின்றது. இக்கேள்விக்கும் பொதுவுடைமை சரியான விடையை வைத்

www.thamizham.net - Free E book No 7418

துக் கொண்டுள்ளது. நம்போல் உள்ள ஒருவனைவிட நாம் மட்டும் எப்படி மிகுதிப்படியாக உழைக்க முடிந்தது? நம்மைப்போல் அவனால் ஏன் உழைக்க முடியவில்லை? அவன் உழைப்பைவிட நம் உழைப்பு மிகுமாறு அவனைவிட நாம் மிகுதியான அல்லது சத்துள்ள உணவு உண்டு வருதல் வேண்டும். அவனால் அப்படி உண்ண முடியாமல் இருந்திருத்தல் வேண்டும் என்று மேலும் உட்புகுந்து ஆய்ந்து விளக்குகின்றது. இவ்வாறு உணவு, உழைப்பு, ஊதியம், வாழ்க்கை ஆகிய எல்லாவற்றிலும் பொதுவுடைமை மிகச் சரியான கொள்கைகளையே வகுத்துக்கொண்டுள்ளது. தனியுடைமைக் கொள்கையைவிடப் பொதுவுடைமைக் கொள்கை மாந்தனுக்குத் தேவையான எல்லாத் துறைகளிலும் சிறந்தது என்று ஒப்புக்கொள்ளும்படி சிறப்பு வாய்ந்த கொள்கைதான். ஆனால் இப்படிப்பட்ட சிறந்த கொள்கையும் சில சிறப்பற்ற அடிப்படைகளில் வேரூன்றி விடுவதே இக்கொள்கையின் கடைப்பிடி வேறுபாடுகளுக்கும், மாறுபாடுகளுக்கும், தோல்விகளுக்கும் கரணியமாகும்.

எடுத்துக்காட்டாக உருசியா, சீனா, போன்ற மிகப் பெரிய நாடுகளும் செக்கோசுலவேகியா, கிழக்கு செருமனி, போலந்து, உருமேனியா, யுகோசுலாவியா, பல்கேரியா, ஆத்திரியா போன்ற மிகச் சிறிய நாடுகளும் பொதுவுடைமைக் கொள்கையைக் கடைப்பிடித்துவரும் நாடுகளாகக் கருதப்பெற்று வருகின்றன. ஆனாலும் உருசியப் பொதுவுடைமை வேறு; சீனப் பொதுவுடைமை வேறு; கிழக்கு செருமனி, போலந்து போன்ற நாடுகளில் உள்ள பொதுவுடைமை அமைப்புகள் வேறு. இவற்றுள் ஒரு நாட்டின் கொள்கை பிழையென்று ஒரு நாடு குற்றஞ்சாட்டுகின்றது. இவற்றுள் மிகப்பெரிய நாடுகளான சீனப் பொதுவுடைமைக்கும் உருசியப் பொதுவுடைமைக்கும் மிகப்பெரிய வேற்றுமையுள்ளது. சீனக்கொள்கை, கொள்கையைச் செயற்படுத்தும் முறை முதலியன தவறு என உருசியாவும், உருசியா தவறு எனச் சீனமும் ஒன்றையொன்று பேரளவில் கடுங்குற்றங்களைச் சாட்டிக் கொள்கின்றன. இவை இரண்டின் நிழலுக்கும் வெயிலுக்கும் உட்பட்ட நாடுகளுக்குள்—வேறு முட்டலும் மோதலும்! இவ் வேறுபாடுகள் ஏன்? இவ் வேறுபாடுகளுக்கு இங்குள்ள பொதுவுடைமைக்காரர்கள் விடைகூறுகின்ற பொழுது, "அவற்றின் கொள்கையில் வேறுபாடுகள் இல்லை; கொள்கையைச் செயற்படுத்தும் முறைகளில்தாம் வேற்றுமைகள் உள்ளன" என்பதாகக் கூறி ஆற்றுப்படுத்துகின்றனர். எஃது எவ்வாறாயினும் பொதுவுடைமைக் கொள்கை முறையிலோ, அல்லது செயல் முறையிலோ எங்கோ ஓட்டையும் உடைசல்களும், உடைசல்கள் இல்லாமற் போனால் விரிசல்களாகிலும் இருக்கத்தான் வேண்டும் என்பதைத்தவிர நாம் ஒன்றும் கூற விரும்பவில்லை. ஆனால் இவ்வோட்டைகளும் உடை

www.thamizham.net - Free E book No 7418

சல் விரிசல்களும் சிற்றளவிலோ பேரளவிலோ, கொள்கையிலோ நடைமுறைகளிலோ எங்கே இருந்தாலும், தனியுடைமை, குடியரசு போன்ற கொள்கைகளில் உள்ளவற்றைவிடக் குறைவானவை யாகவும் அல்லது விரைந்து சரிசெய்துகொள்ளக் கூடியனவாகவுமே இருக்கும் என்பதில் மட்டும் நமக்கு நல்ல உறுதி உண்டு. ஆனால் இவ்வுயர்ந்த கொள்கையில் உள்ள இக்குறைகளும் இக்கொள்கைக்குள்ள பெருத்த இழுக்கே. இவற்றிற்குக் கரணியந்தான் நாம் முதலில் கூறிய "சிறப்பற்ற அடிப்படைகளில் வேருன்றிய" தன்மையாகும். இதன் அகக் கூறுபாடுகளை இவ்வளவில் நிறுத்திக்கொண்டு இதன் புறக்கூறு பாடுகளைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

மாந்தனுக்குச் செல்வம் மிகமிகத் தனியுடைமை உணர்வுகளும், வறுமை மிகமிகப் பொதுவுடைமை உணர்வுகளும் கால் கொள்ளுகின்றன. எண்ணிக்கையில் மிகுந்தவர்களுக்குரிய உணவும் பிறவுடைமைகளும் போதாவிடத்து, இருப்பதைப் பங்கிடவேண்டிய தேவையோ உடைமைப் பொதுவோ ஏற்படுகின்றது. இஃதும் இயற்கையின் கூர்தலற வளர்ச்சியே யாகும். இவ்வியற்கைக் கொள்கை விளைவை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. உலகத்தின் மக்கட்பெருக்கத்தை அடியொட்டி எழும் இக்கொள்கை மிகவும் இயற்கையானதாம் என்றும், சரியானதாமென்றும் கருதி, இதற்கு வழிவிட்டொதுங்குவதே அறிவுடைமை யாகும். இக்கொள்கை ஒருமுறை காலூன்றி விட்டால் பிற அனைத்துக்கொள்கைகளும் வலிவிழந்து போகின்றன. கரணியம் பசித்தேவைக்குப் பின்னரே மாந்தரின் அனைத்துத் தேவைகளும் கருதப் பெறுதல் வேண்டும். உண்ண உணவும் உடுக்க உடையும் அற்று எண்ணற்ற கோடி மக்கள் உழன்று கொண்டிருக்கும்பொழுது உணவுப் பொருள்களையும், உடைமைப் பொருள்களையும் ஏராளமான அளவில் மிகச்சிலர் பதுக்கி வைத்துக்கொண்டிருப்பது இயற்கையின் பொதுமைச் சட்டத்திற்கு மிகவும் முரணானதாகும். நாட்டின்விளைவு மிகுதியாக இருந்து அதனைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக விருந்தபொழுது எவருக்கும் உடைமை பற்றியே கவலையில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் இருப்பதைப் பங்கிட்டாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும்பொழுது இதனை எவரேனும் மறுக்கவோ தடுக்கவோ முனைவார்களாயின் அவர்கள் திருடர்களாகவோ, நாணயமற்றவர்களாகவோதாம் இருத்தல் வேண்டும். எனவேதான் பசுமையான மண்ணில் மண்டிவளரும் பயிர்போல் பசியுள்ள மக்களினத்தில் இக்கொள்கை காட்டுத்தீப்போல் பரவி வளர்வதாகும். பசிமிகுந்த மக்களிடத்தில் கூறப்படும் அமைதிகள், அறமுறைகள், அளவையாட்டங்கள் முதலிய எவையும் அவர்கள் முன்

www.thamizham.net - Free E book No 7418

பொருளற்ற தருக்கமுறைகளாகப் போகின்றன. இந்நிலைக்குச் செல்வக் கொள்ளையர்களே காரணியமன்றிப் பாடுபட்டும் பசியடங்கா உழைப்பாளிகள் அல்லர் என்பதை மிகவும் அமைதியாக எண்ணி ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். அல்லாக்கால் சிலரின் ஆக்க விளைவைவிட அழிவு வினைகளே மிகுதியாக விருக்கும்.

இனி, இயற்கையாக ஏற்படும் இவ்வெழுச்சியையும் அதன் அடிப்படையாக உருவாகும் இக் கொள்கையையும் ஒரு நாட்டிலுள்ள மாந்த இனத்தின் இயல்பான மாற்ற விளைவுகள், குமுகாயத் திருப்புமுனைகள் என்று கருதாமல், வேறு எந்த நாட்டிலிருந்தோ இறக்குமதி செய்யப் பெற்றவை போலும், இக்கொள்கைக்கான ஆட்ட இயக்குநர்கள்—அல்லது தலைவர்கள் வேறு எந்த நாட்டாரோ எனக் கருதும்படி நடப்பதும், தங்களை அவர்களுக்கும் அவர்கள் நாட்டிற்கும் முகவர்களாக அல்லது கொள்கைக் கங்காணிகளாக அல்லது அரசியல் அடிமைகளாகக் கருதிக் கொண்டு, இங்குள்ள ஒருசிலர் இங்குள்ள மக்களின் தன்மானத்தையும் உரிமையையும் அடகு வைப்பதும் அல்லது விலைபோக்குவதும் அல்லது எருவாகப் பயன்படுத்திக் கொள்வதும், அறியாமையும் அடாவடித்தனமும், இனக் காட்டிக்கொடுப்பும் ஆகும் என்பதை மிகவும் அடக்கத்தோடு எண்ணிப்பார்க்க வேண்டிக் கொள்கின்றேன். ஒரு நாட்டின் எழுச்சியுணர்வுகளும் அடக்கவமைதிகளும் அந்நாட்டிற்கே உரியன வன்றிப் பிற நாட்டினின்று இறக்குமதி செய்யப்பெற்றனவாகக் கருதக் கூடாது. மார்க்சு கொள்கை மட்டுந்தான் பொதுவுடைமைக்கு வழி கோலிற்று என்று நாம் கருதிவிடக்கூடாது. அந்தந்த நாட்டின் பழைய வரலாறுகளிலும் குறிப்பாகத்தமிழக வரலாற்றிலும்அக்கொள்கையின் முட்டம் இருக்கத்தான் இருந்திருக்கின்றது. இப்படிக் கூறுவதால் மார்க்சின் பொதுவுடைமை அமைப்புக்கு மாசு கற்பித்ததாகக் கருதக் கூடாது. அவரைப் பற்றி இங்கிருக்கும் பொதுவுடைமையரைவிட என் பாராட்டும் மதிப்பும் எள்ளளவும் குறைந்தவல்ல; கூடியனவாகவே இருக்கும் என்று பெருமையுடனும் கூறிக்கொள்வேன். ஆனால் நான் கூறுவதெல்லாம் ஒருநாட்டின் மக்களமைப்பு, பண்பாட்டு ஒழுங்கு முறைகள், மொழி, இன வரலாறுகள், வேளாண்மை, தொழிலாண்மை முதலியவற்றின் அடிப்படையில்தான் அந்தந்த நாட்டின் பொதுவுடைமைக் கொள்கைகள் அமைக்கப் பெறுதல் வேண்டும் என்பது தான் என்பதைப் பொதுவாக இந்தியர்க்கும் குறிப்பாக இத் தமிழக மக்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். பொதுவுடைமை இயக்கத்திற்கு உருவமைத்துக் கொடுத்த மார்க்சின் கருத்தும் அதுவே. நமக்கு வேண்டிய ஓர் அரசியல் அல்லது பொருளியல் அல்லது குமுகாயவியல் சார்ந்த கொள்கையை நாம் புதிதாக உருவாக்கிக்

www.thamizham.net - Free E book No 7418

கொள்ளவேண்டியிருந்தாலும் சரி, அல்லது திருத்தியமைத்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் சரி அது நமக்குப் பொருந்தின அள வில்தான் அமைதல் வேண்டும். அவ்வில் நினைத்துக் கொண்டு உரலை இடித்தல் கொள்கைக்கும் பொருந்தாது; செயலுக்கும் பொருந்தாது; அறிவுக்கும் பொருந்தாது. எனவே எவ்வளவு உயர்ந்த வெளிநாட்டுத் துணியாக விருந்தாலும், அதனை நம் பரும உயரங்களுக்குத் தக்கவாறு வெட்டி அளவெடுத்து நமக்குப் பொருந்திய முறையில்தான் நம் கொள்கை உடையைத் தைத்துக்கொள்ளலாமே தவிர, வேறொரு நாட் டிற்கு அதன் அரசியல், பொருளியல், குமுகாயவியல், வெப்ப தட்ப நிலை களுக்கேற்பத் தைக்கப் பெற்ற ஆடை நமக்குப் பொருந்தாது என்பதை அறிவினர் எண்ணி ஏற்றுக்கொள்ள வேண்டிக்கொள்கின்றேன்.

அடுத்து, எந்த ஒரு கொள்கையானாலும் சரியே; அது மக்களின் உணர்ச்சியைப் பொறுத்த செய்தியே. மக்கள் உணர்ச்சிக்குப் பொருத்தமில்லாத சில கொள்கைகள் சிற்சிலகால் அரசியல் வல் லாண்மையாலும், செல்வச் செருக்காலும் வலிந்து மக்களிடையில் திணிக்கப் படலாம். அக்கொள்கைகளை மக்களும் அப்பொழுதைக்குப் பெயரளவிலோ, புதியது வேட்கும் தன்மையாலோ, அல்லது தங்களுக் குப் பொருந்தாதன என்றறியவியலா அறியாமையாலோ, நோயாளி சுவையான ஆனால் தன்னுடலுக்கு ஏற்காத உணவை ஏற்றுக்கொள் வது போல—அல்லது குழந்தைதன் தந்தையின் புதுச்செருப்பைத் தான் போட்டுக்கொண்டு நடப்பதுபோல, அல்லதுதன்னை ஏதோஒருவகையில் கவர்ந்துவிட்டவன் என்ற ஒரே கரணியம் பற்றித் தனக்கு எவ்வாற்ரு னும் பொருந்தாத ஒருவனை உலகறியாப் பேதைப்பெண்ஒருத்தி மணந்து கொள்வதைப்போல, ஏற்றுக்கொள்ளலாம். நாளடைவில் தங்களின் பொருந்தாத தேர்வினால் வரும் துயரங்களின் அழுத்தத்தால், தங் களின் கொள்கைத் தேர்வைப் பிழையென்று உணரலாம். சிலபொழுது கொள்கையேகூட பிழையென்று மயங்கலாம். எஃது எவ்வாறாகுனும் ஓரின மக்களின் உள்ளுணர்வுக்குப் பொருந்தி வராத ஒரு கொள் கையோ, அரசியலோ நெடுநாட்களுக்கு, ஏன் சிறிது காலத்திற்குக்கூட நிலைத்து நிற்பதில்லை. விரைவில் ஆட்டங்கொடுத்துவிடத் தொடங்கும். அல்லது உள்ளரிப்பு போன்ற பூசல்கள் நிகழும். அக்கால் மூலக்கொள் கையே பிழையோ என்ற ஐயப்பாடுகூட அதனைப் புறமிருந்து பார்க்கும் பிறர்க்கும், சிற்சிலகால் அகமிருந்து இயங்கும் கொள்கையாளர்க்கும் தோன்றிவிடலாம். இந்நிலையில் கொள்கையில் தேவையில்லாத ஆய் வுகள் நிகழலாம். வேறுபாடுகள் தோன்றலாம். அவற்றின் அடிப்படை யில் வலப்புற இடப்புறக் கட்சிகள் உருவாகலாம். அப்படிப்பட்ட உரு வாக்கங்களும், பூசல்களுந்தாம் இப்பொழுது நாம்பார்க்கின்ற இந்தியப்

www.thamizham.net - Free E book No 7418

பொதுவுடைமைக்கட்சியிலும், உருசிய, சீன அரசியலிலும் நிகழ்ந்தனவும் நிகழப்போகின்றனவுமாகும். இவற்றைத்தான் **சிறப்பற்ற அடிப்படைகளில் ஊன்றிவிடும் தன்மைகள்** *என்று முன்னர் குறித்தேன். எத்தகைய சிறந்த விதையானாலும் அதை ஊன்றுகின்ற நிலத்தையும் முறையையும் பொறுத்ததே அதன் விளைவு. பொதுவுடைமைக் கொள்கை சிறந்ததுதான். ஆனால் அதனை ஊன்றுகின்ற முறைதான் இந் நாட்டில் சரியாகக் கடைப்பிடிக்கப் படுவதில்லை. அக்கொள்கையை ஊன்றவே இவ்வளவுகாலம் பிடிப்பதும், ஊன்றியவிடத்தும் ஆட்ட அசைவுகள் ஏற்படுவதால் நன்கு வளராமலிருப்பதும், அக்கொள்கையின் விளைவாக்க முறைகளின் தோல்வியைத்தான் குறிக்கும். இத் தோல்வியை அவர்கள் ஒப்புக் கொள்வார்களானால் அதனை வெற்றியாக்கும் சில முறைகளிலும் அவர்கள் கருத்துச் செலுத்தியாகல் வேண்டும்.*

அதற்கு அவர்கள் முன்வருவார்களானால், முதலில் பொதுவுடைமை என்பது ஒரு நாட்டின் தனியுடைமை, அஃதாவது ஒரு நாட்டிற்கே மட்டும் உரிய கொள்கை அன்று என்பதையும், ஒரு நாட்டினால் மட்டுந்தான் அக்கொள்கைக்குத் தலைமை ஏற்க முடியும் என்பது சரியன்று என்பதையும், அந்தந்த நாட்டிற்கும் பொருந்துமாறு அக்கொள்கையை உருவாக்கம் செய்துகொள்ள முடியும்-என்பதையும் அவ்வியக்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். இரண்டாவதாகப் பொதுவுடைமை என்பது மக்களின் உணர்ச்சியைப் பொறுத்தும் பண்பாடுகளை யொட்டியும் அமைக்கப் படவேண்டிய கொள்கையாகலின், பொதுவுடைமைக்காரர்கள் தமிழக மக்களிடையே இக்கொள்கையைப் பரப்ப விரும்புவார்களாயின், இத் தமிழக மக்களின் மொழியுணர்ச்சிக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் மதிப்பளித்தே யாகல் வேண்டும். மொழி, இனம் போன்றவை குறுகிய கொள்கைகள் என்பது அவர்களின் கருத்தானால், பொதுவுடைமையை மேற்கொள்ளும் இயற்கை யுணர்விற்கும் அதனைச் செயற்படுத்தும் விளைவாக்க முனைப்பிற்குமே அவர்கள் மாறுபட்டவர்கள், தகுதியற்றவர்கள் என்று கருதிக்கொள்ளுதல் வேண்டும். மூன்றாவதும் முடிவானதுமான ஒருண்மையை அவர்களின் பொருட்டும் இந் நாட்டு மக்களின் பொருட்டும் கூறி இவ்வுரையை முடித்துக்கொள்வதே சால்பாகும் என்று நினைக்கின்றேன். நான் மேற் கூறிய இரண்டு வழிகளையும் கடைப்பிடித்து அவற்றிற்குத் தகுந்த வழியில் பொதுவுடைமைக் கொள்கை இங்கு நிலைநாட்டப் பெறவில்லையானால், அறிவுக்கும், இயற்கைக்கும், மாந்த உணர்விற்கும் பொருந்தியவழி மொழியையும், இனத்தையும் பண்பாட்டையும் அடியொட்டியவாறு ஒரு பொதுமைக்குமுகாயம் இங்கு உருவாகி வருமென்றும், அவ்வாறு அக்குமுகாயம் தலையெடுக்குங்கால், இவர்கள் பேசும் இக்காலப் பொதுவுடைமைக் கொள்கை பொருளற்றதாகவும் தேவையற்றதாகவும் போய்விடலாம் என்றும், அக்கொள்கை வலுப்பெற வலுப்பெற அமைதி தவழும் ஓர் உயர்ந்த புதுமை உலகம் உருவாகும் என்றும் அவர்கள் உணர்ந்துகொள்வார்களாக. —பெருஞ்சித்திரன்.

www.thamizham.net - Free E book No 7418

என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்

-4- -பெருஞ்சித்திரன்-

எதிலும் முன்னோடித்தனமாக நடப்பதில் எனக்கு மகிழ்ச்சி. ஆனால் என் முன்னோடித்தனத்தில் என் கால்கள் சறுக்கியதில்லை; கைகள் துவண்டதில்லை; கண்கள் பின்னோக்கியதில்லை. எதனை எத்தனைப் பொறுப்புடன் தூக்கித் தோள்மேல் போட்டுக் கொண்டேனோ அத்தனைப் பொறுப்புடனும் அதனை இறுதி இலக்குவரைத் தூக்கிச் சென்றுதான் கீழே வைத்திருக்கின்றேன். இடையில் அச்சுமை தேவையற்றதாக நான் கருதினாலோ, நான் தூக்கத் தேவையில்லை என்று அச்சுமைக்குரியவர் கருதிக் கூறினாலோவன்றிச் சுமை இறுதிவரையிலும் தூக்கப்பெற்றுத்தான் தீரும். எனவே என் 'முன்னோடித்தனத்தில் வெறும் முந்திரிக்கொட்டைத்தனம் மட்டுமன்றி, பொறுப்பும் இருந்தது; இருக்கின்றது; இருக்கும் என்று உறுதியாக' நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நான முதல்வகுப்பு மாணவனாகப் புகுந்த தொடக்கநிலைப் பள்ளிக்கூடத்திலிருந்து கல்லூரி மாணவனாக இருந்து வெளியேறிய நிலைவரை, அப்பள்ளிக் கட்டிடத்திற்குள்ளும் கல்லூரிக் கட்டிடத்திற்குள்ளும் ஒவ்வொரு நாளும் செல்லும் முதல் மாணவன் நான்தான். சிலநாட்களில் பள்ளிக்கோ கல்லூரிக்கோ போய்ச் சேரும் நேரத்தில் சிறிது தாழ்வேற்பட்டிருக்கலாம்; ஆனால் அந் நேரங்களில்கூட நான் வீட்டிலிருந்து புறப்பட்ட நேரம் மிகவும் முற்பட்ட நேரமாகவே இருக்கும்.

தொடக்கப்பள்ளிப் படிப்புக்காலம் முழுவதும் பள்ளியின் திறவு கோலை ஒரு கண் குருடாகிய இரவுக் காவலனிடமிருந்து பெற்று அன்றாடமும் பள்ளிக் கட்டிடத்தைத் திறப்பவனே நான்தான். அஃதாவது ஐந்தாம் வகுப்புவரை 'அந்தக்காலத்து மொழியில் சொன்னால்' நான்தான் சட்டாம்பிள்ளை. அந்த ஒருகண் குருட்டுக் காவலன் எனக்கு வைத்த பெயரே முந்திரிக்கொட்டைதான். ஆனால் அவனுக்கு அம் முந்திரிக்கொட்டை மட்டுந்தான் தெரிந்திருந்தது. அதன் சுவையையும் மணத்தையும் அவன் அப்பொழுது அறிந்திருக்க வழியில்லை; அதற்குப் பின்னும் அவன் அறிய முடியாமலேயே போய்விட்டது. ஐந்தாம் வகுப்பிலிருந்து பள்ளியிறுதி வகுப்பு வரையில் பள்ளியின் எந்தப் பொதுநிகழ்ச்சியானாலும் என்னை முதலில் அங்குப் பார்க்க

www.thamizham.net - Free E book No 7418

லாம். நான் படித்த சேலம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் என் காலத்தில் என்னைத் தெரியாத மாணவனும் இரான்; ஆசிரியரும் இரார். தலைமையாசிரியர்கள் பலர் மாறினாலும் அவர்கள் அனைவர் பாலும் மிகவும் நெருக்கமாக இருந்தவன் நான். அதனால் பலருக்கும் பல நன்மைகள். தோல்வியுற்ற எத்தனையோ மாணவர்களைத் தேறிய வர்களாகச் சான்றிதழ்கள் வாங்கித் தந்து வேறு பள்ளிகளில் சேர்த் திருக்கின்றேன். இந்தியெதிர்ப்பு வேலைகள் நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கின்ற பொழுதே தொடங்கியவை. இப்பள்ளிப் பருவத்து நிகழ்ச்சிகள் ஏராளம். அவற்றை யெல்லாம் எழுதிக்காட்டிக் கொண் டிருக்கும் பணியை நான் இக் கட்டுரைத் தொடரில் எடுத்துக்கொள்ள வில்லை யாகையால், அன்பர்கள் அவற்றைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இந்த என் முந்திரிக்கொட்டைத்தனம் என்னுள் பொதிந்து கிடக்கும் மலைபோன்ற துணிச்சலை நான் வளர்த்துக் கொள்ளப் பயன்பட்டது என்பதை விளக்குவதற்காக மட்டும் இவற் றைக் குறிப்பிடுவது இன்றியமையாததாக எனக்குப் படுகிறது.

துணிவு என்றால் கொஞ்சநஞ்சம் அன்று. எத்தனைப் பெரிய அரிய வினைப்பாட்டிலும் எனக்குச் சரியென்று பட்டவுடன் இறங்கி விடுவேன். சிறு அகவைப் பொழுதிலிருந்தே இத்துணிவு என் உயி ரில் முட்டமிட்டிருந்தது. சில நிகழ்ச்சிகளுடன் இதைப் பொருத்திக் காட்டினால் புரிந்துகொள்ள எளிமையாக விருக்கும் என்று கருதுகின் றேன். அப்பொழுது எனக்கு அகவை (வயது) நான்கு இருக்கும். எங்கள் வீட்டிலிருந்து ஏறத்தாழ இரண்டுகல் தொலைவில் ஒரு திரைப் படக் கொட்டகை இருந்தது. வழிநெடுகிலும் அடர்ந்து விரிந்த புளிய மரங்கள்; இடையிடையே ஓர் இரண்டு ஒன்றிக் கடைகள்; தேநீர்க் கடைகள், வெற்றிலைபாக்குக் கடைகள் போன்றவை. ஒருகால், இரண் டாவது காட்சித் திரைப்படம் பார்ப்பதற்கென்று என் குடும்பம் புறப் பட்டது. அப்பொழுதெல்லாம் திரைப்படம் பார்க்கப் போவதானால் குறைந்தது பத்து இருபது பேராகச் சேர்ந்துதான் போய்வருவது வழக்கம். திருடர் அச்சம் மிகுந்திருக்கும். மேலும் வீட்டிற்கும் திரைப் படக் கொட்டகைக்கும் இடையில் உள்ள இரண்டு வழிகளில் ஒரு வழியில் கிறித்தவர் கல்லறை ஒன்று இருந்தது. ஒருவழியில் ஏரி யொன்றிருந்தது. மின்விளக்குகள் மிகவும் குறைவாகவே இரண்டு மூன்று படைச்சாலுக்கு (Furlong) ஒன்று என்ற வகையில் மினுக் மினுக்கென்று இருக்கும்.

www.thamizham.net - Free E book No 7418

திரைப்படக் காட்சி முடிந்ததும் என் வீட்டாரின் தொடர்பி லிருந்து நான் விடுபட்டுவிட்டேன். சிறிது நேரத்தில் கூட்டம் கலைந்து அந்தத் திரைப்படக் கொட்டகை இருந்த இடம் வெறிச் சோடியது. கொட்டகை விளக்குகள் அனைத்தும் அணைக்கப் பெற் றன. நான் இங்கும் அங்கும் அலைந்து என் குடும்பத்தாரைக் கண்டு பிடிக்கச் செய்த முயற்சிகள் அத்தனையும் பயனளிக்காமல், இறுதி யில் தன்னந்தனியனாக நின்றிருந்தேன். வீட்டினர் என்னைத்தேடிப் பார்க்கும் ஒரு தேவையே இல்லாமல் நானும் அவர்கள் கூட்டத் துடன் வருவேன் என்ற நினைப்புடன் வீட்டிற்குச் சென்றுவிட்டனர். அவர்கள் வீட்டிற்குச் சென்றபின்தான் நான் இல்லாமலிருப்பதைக் கண்டனராம். கண்டு என்னைப்பற்றி அவர்கள் பலவாறும் எண்ணி அச்சப்பட்டுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் நான் வீடுசெல்ல வியலாமல் தவித்துக் கொண்டிருந்தேன். வீட்டிற்குப் போக வழி தெரியும். என்றாலும் தனியே போவதில் ஒரு தயக்கம் எனக்கிருந்தது. காரணியம் நான் கால்களில் வெள்ளிக்காப்புப் போட்டிருந்தேன். காது களில் கடுக்கன் அணிந்திருந்தேன். திருடர் வந்து அவற்றைப் பிடுங்கிக் கொண்டால் என்ன செய்வது? அப்படியே என்னையும் கொன்றுபோட்டுவிட்டால் அப்பா அம்மா எவ்வளவுவருந்துவார்கள்! அப்பொழுது நான் ஒரே பையன்தான். தமக்கை ஒருத்தி இருந் தாள். இந்த நினைவுகளெல்லாம் வந்தபின் நான் தனியே அந்த இருள்நிறைந்த புளியமரச்சாலையில் எப்படிப் போவேன்? நெடுநேரம் வீட்டிற்குச் செல்லும் இரண்டு சாலைகளிலும் சிறிது தொலைவு நடப் பதும் பின்பு கொட்டகை இருக்கும் இடத்திற்கே திரும்பி வருவது மாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தேன். இரவு மணி மூன்று இருக்கும். (அப்பொழுதெல்லாம் திரைப்படங்கள் மிகவும் நீளமானவையாக இருக்கும். படம்விட நெடுநேரம் ஆகும்.)

இங்கும் அங்கும் சுற்றிக்கொண்டிருந்த நான், இறுதியில் ஒரு புளியமரத்தினடியில் குதிரைவண்டி யொன்று நிறுத்தப்பட்டிருப் பதையும், வண்டிக்காரன் அதில் படுத்து உறங்கிக்கொண்டிருப்ப தையும் கண்டேன். உடனே எனக்கு ஒருவழி புலப்பட்டது; வண்டிக் காரனைப் போய் எழுப்பினேன். தூக்கத்திலிருந்த அவன் என்னைக் கடுமையாகத் திட்டிக்கொண்டு எழுந்தான். நான் மிகவும் சிறிய பையன் என்று அறிந்ததும் அவன் வியந்து, "என்ன தம்பி, என்ன வேண்டும்? நீயார்? இங்கே எப்படிவந்தாய்?" என்றுகேட்டான். நான் அவனிடம் ஒன்றும் விடைகூற வில்லை, அவனிடம் எங்கள் வீடு இருக்கும் இடத்தைமட்டும் சொல்லி "அங்கு வண்டிவர என்ன வாடகையாகும்?" என்றேன். அவன் வியப்போடும், நிறைய வாங்கி

www.thamizham.net - Free E book No 7418

விடலாம் என்ற எண்ணத்தோடும், "முக்கால் ரூவா ஆகும்; கொடுப்பியா?" என்றான். அப்பொழுது முக்கால் உருபா என்பது மூன்று நான்கு உருபாவுக்குச் சமம். பொதுவாக நம் வீட்டிற்கும் அக்கொட்டகைக்கும் அப்பொழுதிருந்த குதிரைவண்டிக் கட்டணம் இரண்டு அணுக்கள்தாம். இரவாக இருந்தால் மூன்றணுவரை கேட்பார்கள். நான் இதைப்பற்றி யெல்லாம் எண்ணிக்கொண்டிருக்க வில்லை. உடனே, "சரி, வா; ஓட்டு" என்று வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டேன். குதிரை தின்றுகொண்டிருந்த புல்லை வாரி வண்டிக்கடியில் தொங்கிக்கொண்டிருந்த கோணிப்பையில் திணித்துக்கொண்டு சுருட்டு ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு வண்டிக்காரன் ஏறி அமர்ந்து குதிரையைச் சீண்டிவிட்டான். குதிரை ஆடி அசைந்தபடி நடந்துகொண்டிருந்தது. வண்டிக்காரனுக்கு வழியைக் காட்டிக்கொண்டே சென்றேன். நாங்கள் வீடுவந்து சேர்கையில் விடியற்காலம் மணி நான்கு இருக்கும். வீட்டிற்கு அருகில் வண்டி போக முடியாது; வண்டியை இரண்டு மின்சாரக் கம்பத் தொலைவிலேயே நிறுத்திவிட்டு வண்டிக்காரனை "என் பின்னாலேயே வா; காசு வாங்கிக் கொடுக்கின்றேன்"-என்று அழைத்துக் கொண்டு போனேன். நம் வீட்டில் மட்டுமன்று; பக்கத்தில் உள்ள நான்கைந்து வீடுகளிலும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. யாரும் தூங்கவில்லை. என்னைப் பார்த்தவுடன் என் அன்னையார் ஓடோடிவந்து தூக்கி அணைத்துக் கொண்டார். என் தந்தை "எங்கடா போயிருந்தாய்?" என்று வெருட்டத் தொடங்கினார். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எல்லாரும் என்னைப் பரிவுடன் அணுகி, "எப்படியப்பா எங்களைப் பிரிந்து போனாய்? எப்படி வந்தாய்?" என்றெல்லாம் பலவாறாய் உசாவினார்கள். நான் சிறிதுநேரம் இந்தச் சூழலில் வண்டிக்காரனை மறந்தே போனேன். நான்மட்டுமில்லை. அங்கிருந்த எவருமே வண்டிக்காரனைப் பார்க்கவே இல்லை. பிறகுதான் வண்டிக்காரனின் நினைப்பு வந்தது. உடனே பெற்றோரிடம், "முதலில் இந்த வண்டிக்காரர்க்கு முக்கால் உருபா கொண்டுவந்து கொடுங்கள்" என்றேன். தந்தையார் உடனே ஓடிப்போய் ஓர் உருபாத்தாளை எடுத்துக் கொடுத்தார். வண்டிக்காரன் இரட்டைக் கும்பிடு போட்டுவிட்டு அதை வாங்கிக் கொண்டு போனான். அதில் ஒரு கும்பிடு எனக்கு! என் கதையை அறிந்த எல்லாரும் அன்றிரவு விடிய விடியத் தூங்கவே இல்லை.

(தொடரும்)

உ. த. க. மாநாட்டிற்குக் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் புறப்பட அணியமாகுங்கள்!

தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டம்

அறிக்கை-I.

மக்களிடையில் ஒரு கருத்தையோ கொள்கையையோ விரைந்து பரப்புதற்குச் செய்தித்தாளைத் தவிர சிறந்த கருவி வேறொன்றுமில்லை. பண்டைக்காலத்தே ஆரியப் பார்ப்பனர் தம் ஏமாற்றுக் கொள்கைகளைப் 'புராண' 'இதிகாச'ங்களின் வழியே பரப்பியது போன்றே, பிற்காலத்தே அவர்தம் பொய் புரட்டுகளுக்குத் துணை புரிந்தவை செய்தித்தாள்களும் வானொலியும், பிற அரசியல் அதிகாரப் பதவிகளுமே. இவ்வழியே அவர்கள் பரப்பிவரும் பொய்ம்மையும் போலிமையும் நிறைந்த கருத்துகளை முறியடிக்கும் வகையில் நாம் இன்னும் வலுப் பெற்றோமில்லை. நாளொன்றிற்கு இலக்கக் கணக்காக அடித்து நம் கருத்துகளை வெளிப்படுத்தும் பெரிய நாளிதழ்கள் தன்மானத் தமிழரிடையில் ஒன்றுகூட இல்லை. 'தினத்தந்தி' போன்ற தமிழர் நடத்தும் நாளிதழ்கள் ஓரளவு மிகுந்த எண்ணிக்கையில் விற்பனையாகின்றனவேனும், அவற்றால் தமிழர் அடைந்துவரும் பயனைவிட, கேடுகளே மிகுதி என்று நடுநிலைத் தன்மானத் தமிழர் யாவரும் உணர்வர். வானொலித் துறையை எடுத்துக்கொண்டாலோ, தில்லி முதல் திருநெல்வேலி ஈறாக ஆரியப் பார்ப்பனரின் கையோச்சுதலே மிகுதி. நாமெல்லாம் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகும் அளவிற்கு அவ்வாரியப் பார்ப்பனர்களும் பார்ப்பனத்திகளும் அவர்தம் குஞ்சு குளுவான்களும் செய்யும் கூத்துகளும், கொட்டமடிப்புகளும், 'அக்கிராகர'ப்பேச்சு நடைகளும் மிகுதி; மிகுதி; மிகுதி! தப்பித்தவறி வானொலி நிலையங்களில் பணிபுரிந்துவரும் நம்மனோரில் பெரும்பாலோரும் தொடைநடுங்கிகளாகவும், தோள் சூம்பிகளாகவும், துணிவான ஒரு சொல்லையும் வெளிப்படுத்த வியலாத கோழைகளாகவுமே இருப்பதை நாம் கண் வருந்தக்கண்டு உளம் வருந்தப் புண்படவேண்டியுள்ளது. சிற்சில நேரங்களில் அவர்களில் சிலர்வழி நமக்குக் கிடைத்துவரும் வாய்ப்பையும் நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவியலாதபடி அவர்களே நம் முதுகைக் கூனவும், நம் தோளைத் தாழ்த்தவும், நம் குரல்வளையை நெறிக்கவும் செய்து விடுகின்றனர். கேட்டால், படிப்படியாகத்தான் நாம் பார்ப்பனரின் கைவரிசைகளை முறியடிக்க வேண்டும் என்கின்றனர். படிப்படியாக இவர்கள்வழி நாம் அளந்து முடிவதற்குள், பார்ப்பான் மூட்டை மூட்டையாக அடித்துக் கொண்டு போய்விடுவான் என்பதை இவர்கள் எந்த வகையில் சொன்னாலும் நம்புவதில்லை. புரிந்துகொள்ள விரும்புவதுமில்லை. அரசியல் அதிகாரப் பதவிகளில் உள்ளவர்களைப்பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. எனவே அங்கிங்கெனாதபடி எங்கும் புகுந்து, நீக்கமற நிறைந்து தாம் ஆக்கமுற வாழ்ந்துவரும் ஆரியப் பார்ப்பனியத்தை

www.thamizham.net - Free E book No 7418

நாம் வேருடன் சிதைக்கவேண்டுமானல், பெரியாரையும், அவர் விடுதலையையும்மட்டும் நம்பிக் கொண்டிருந்தால் பயனில்லை. விடுதலை படிப்பவர் பத்தாயிரத்துக்கு ஒருவர்கூட இல்லை. மேலும் விடுதலையும் பெரியாரும் ஆரியத்திற்கு வாளே தவிர, தமிழுக்குக் கேடயம் ஆகார். எனவே மொழியாலும், இனத்தாலும், கருத்தாலும் ஆரியரையும், அரசியல் பொருளியலால் வடவரையும் முறியடிக்கவும், நம் தன்மானக் குரலை எழுப்பவும்; நாம் வல்லடிமைத் தனத்தினின்று மீளவும், தனித் தமிழ்க் கொள்கை யடிப்படையில் செப்பமும் ஒழுங்கும் நிறைந்த செய்தித்தாள் ஒன்றினை நாம் தொடங்கியாக வேண்டும்.

செய்தித்தாள் தொடங்குவது அவ்வளவு எளிதன்று. யானை கட்டிப் போரடிப்பதான ஒரு செயல் அது. தாளிகையுலகில் கடந்த பதினைந்தாண்டுகளாக நான்-தனிப்பட்ட நான், தொட்டறிந்த வினையறிவும், பட்டறிந்த கருவியறிவும், கெட்டறிந்த துணையறிவுமே என்னை அச்சுறுத்தும் படியான ஒரு திட்டம் இச் செய்தித்தாள் திட்டம். இவ்வகையில் எனக்கு உண்மையை உணர்த்திய குறள்கள் மூன்று. அவை இவை:

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்

நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

எப்படியாவது ஒரு திட்டத்தை வெளிப்படுத்தி விட்டால் அஃது எக்கேடோ கெட்டுவிட்டுப் போகின்றது-என்றெண்ணுபவனல்லன் நான். எண்ணித் துணியவேண்டும் என்பதும், துணிந்தபின் எண்ணுவது (மடமையோ, கேடோ அல்ல) இழுக்கு என்பதும் எனக்குத் தெரியும். "கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை; இடைக் கொட்கின் எற்றா விழுமந்தரும்"—என்பதை நான் கடைப்பிடிக்கப் பழகிக் கொண்டவன். செய்தித்தாள் துறையில் உள்ள இழிவுகளையும் சிறப்புகளையும் ஓரளவு உணர்ந்தவன். அங்கு நடக்கும் புரைகளையும் பூசல்களையும் கண்டு முகஞ்சுளித்தவன். அத்துறையினையும் மாற்றியமைத்தாக வேண்டும் என்று உறுதி பூண்டவன். இவற்றின் அடிப்படையிலேயே எனக்கென்று நானே ஒரு தகுதியை ஏற்படுத்திக் கொண்டு இத்திட்டத்தை-நடந்தாக வேண்டிய இவ்வாக்க வேலையை உங்கள்முன் அறிமுகப் படுத்துகின்றேன். தன்மானமும், தமிழ், தமிழர், தமிழகம் பற்றிய அக்கறையும் கொண்டவர்கள் மேலே படிக்கலாம்; படித்துத் தமக்கு அவற்றின் மேல் உள்ள உறுதியை நிலைநாட்டிக் கொள்ளலாம். அப்படியில்லாதவர்கள் இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம்.

www.thamizham.net - Free E book No 7418

இத்திட்டத்தின் அடிப்படைக் கூறுபாடுகள்:

1. இத்திட்டத்திற்கும் தென்மொழிக்கும் எந்தத் தொடர்புமில்லை.

2 இத்திட்டம் முழுவதும் தனித்தமிழ்க் கொள்கைகளைச் செயற்படுத்தும் திட்டமே.

3. தென்மொழியால் நிறைவு செய்ய வியலாத பொதுத்துறைகள், பொதுமக்கள் தொடர்பு, கலையாக்கங்கள், நாட்டு நடப்புகள், பொழுதுபோக்குகள் முதலிய அனைத்தும் இத்திட்டத்தால் நிறைவு செய்யப்பெறும்.

4. தனித்தமிழ் இயக்கத்தினர்க்கும், உலகத் தமிழ்க் கழகத்தினர்க்கும் ஊக்கமூட்டும் வகையிலும், பிற பத்தாம்பசலிக் கொள்கையினர் யாவரும் அஞ்சிப் புறம்போகும் வகையிலும் அமைக்கப்பெறும் இத்திட்டம் பின்முறையாக உலக முழுமையும் விரிவாக்கப்பெறும்.

5. வெறும் பேச்சளவில் நில்லாது வினையளவில் நம் கொள்கைகள் அனைத்தும் நிறைவேற இத்திட்டம் இன்றியமையாத ஒரு செயல் திட்டமாகக் கொள்ளப்பெற்றுக் கூட்டுறவு முறையில் இஃது இயக்கப்பெறும்.

இத்திட்டத்தின் செயல்முறைகள்:

1. பங்கு ஒன்று நூறு உருபாயாகக் குறைந்தது ஆயிரம் பங்குகளும் முடிந்தால் அதற்கு மேலும் சேர்க்கப்பெறும் தொகையும், பங்கு ஒன்று ஐந்நூறு உருபாயாகக் குறைந்தது இருபதும் மிகுந்தது ஐம்பது மாகச்சேர்க்கப்பெறும் தொகையும், பங்கு ஒன்று ஆயிரம் உருபாயாகக் குறைந்தது பத்தும் மிகுந்தது இருபதுமாகச் சேர்க்கப்பெறும் தொகையும் இத்திட்டத்தின் முதலீட்டுத் தொகையாகும்.

2. குறிக்கப்பெற்ற குறைந்த பங்குகள் சேர்ந்தாலன்றி இத்திட்டம் நிறைவேற்றப்படமாட்டாது.

3. பங்கினர் அனைவரும் திட்டத்தின் பொது உறுப்பினர்களாகவும், நூறு உருபாப் பங்கினரில் பத்துள் ஒருவரும், ஆயிர உருபாப் பங்கினரில் ஐந்துள் ஒருவரும் செய்தித்தாள் செயற்குழு உறுப்பினர்களாக ஒப்போலைவழியும் தேர்ந்தெடுக்கப் பெறுவர். செயற்குழு உறுப்பினருள் பத்தில் ஒரு பங்கினர் ஆசிரியர்குழு உறுப்பினர் ஆவர். ஆசிரியர்குழு உறுப்பினர் சேர்ந்து தம்முள் ஒருவரையோ, தாம் விரும்பும் உறுப்பினரல்லாத பிறரையோ தம்முள் பெரும்பான்மையோரின் விருப்பின்படி பொறுப்பாசிரியராக அமைத்துக் கொள்ளல் வேண்டும். உறுப்பினர் அல்லாத ஒருவர் ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பெறின் அவர் உறுப்பினர் ஆகிவிடுதல் வேண்டும். இவ்வமைப்பு குறித்த பிற நடைமுறைச் சட்டதிட்டங்கள் யாவும் இத்திட்டப்படி நடக்கும் முதல் செயற்குழுக் கூட்டத்தில் வரையறுக்கப்பெறும். செய்தித்தாளுக்கான பெயரும், பிற ஆக்கங்குறித்த செயல்களும் அச் செயற்கூட்டத்திலேயே வரையறுக்கப்பெறும்.

www.thamizham.net - Free E book No 7418

4. பங்குத் தொகைகளை எவரும் முன்கூட்டியே விடுத்தலும் தண்டுதலும் கூடாது. பங்குத் தொகைகள் யாவும் முழுமையாக, பங்காளரின் முதல் செயற்குழுக் கூட்டத்தின் தொடக்கத்தில் கட்டப் பெறுதல் வேண்டும். இத்திட்டத்தில் முத்துறை உறுப்பினருள் ஒருவராகச் சேர விருப்புவோர் கீழ்க்காணும் உறுதிமொழியை இத்திட்ட அமைப்பாளரின் கைக்குப் பதிவுமடல் வழி 1969 திசம்பர் 31-ஆம் பக்கலுக்குள் கிடைக்குமாறு அறிவித்திடல் வேண்டும். அதற்குப்பின் வரும் உறுதிமொழிகளை இத்திட்டத்தில் சேர்த்தல் இயலாது.

5 உறுதிமொழி: தென்மொழி இதழில் அண்மையில் வெளிவந்த "தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டத்தில்" என்னையும் ஓர் உறுப்பினனாகவும் 100/ 500/ 1000 உருபா பங்காளனாகவும் பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளுகின்றேன். பங்குத் தொகை முழுமையையும் இத்திட்டத்தின் வழிநடக்கும் பங்காளரின் முதல் செயற்குழுக் கூட்டத்தின் தொடக்கத்தில் கட்டிவிடுவேன் என்று உறுதியளிக்கின்றேன். என்னை இன்றிலிருந்து பங்காளருள் ஒருவனாகவே கருதிக் கொண்டு. எல்லா நடைமுறைகளையும் எனக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். எதிர்பாரா வகையில் நான் பங்குத்தொகையைக் கட்டத் தவறிவிடுவேனாயின் என்னால் அதுவரை தங்கட்கு ஏற்பட்ட தொல்லைகளையும், பிற செலவுகளையும் ஈடுகட்டும் வகையில் திட்ட முதல்செயற்குழு தீர்மானிக்கும் தண்டத்தொகையைநான் தங்களிடம் செலுத்திவிட உறுதியளிக்கின்றேன்.

இங்ஙன்,
(முழு முகவரி) (கையொப்பம்)
(நாள்)

6. திட்டமும், திட்டத்தின்வழி நடைபெறவிருக்கும் செய்தித்தாளும், அதன் இயக்க முறைகளும், அவற்றைச்சாரும் உடைமைகளும் பிறவும் அரசினர் கூட்டுறவுச் சட்டதிட்டங்களின் அடிப்படையிலேயே நடைபெறும்.

7. இத் திட்டத்தின் பிற விளக்கங்கள் அவ்வப்பொழுது தென்மொழியில் அறிவிக்கப்பெறும். முதல் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு பதிவஞ்சல்வழி எல்லா உறுப்பினர்க்கும் தெரிவிக்கப்பெறும். எனவே, உறுப்பினர்கள் அனைவரும் தம்தம் உறுதிமொழியுடன் ஒவ்வோர் உருபா அஞ்சல் தலையையும், எல்லைக்கடவு (Pass Port) அளவில் தம் உருவப்படங்கள் (Photo) இரண்டினையும் கட்டாயம் விடுத்து வைத்தல் வேண்டும். அஞ்சல் தலையும் உருவப்படங்களுமின்றி வரும் உறுதிமொழிகளைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுதல் இயலாது. பிற பின்னர்.

மே/பா, தென்மொழி
கடலூர்-க
கன்னி கரு. 1-10-1969

பெருஞ்சித்திரன்,
அமைப்பாளர்,
தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டம்.

www.thamizham.net - Free E book No 7418



[ம. 66] பெரியாரும் பாவாணரும் இல்லையென்றால்.....?

அன்புள்ள ஐயா, வணக்கம். தங்கள் 'தென்மொழி'யின் மீது அளவற்ற பற்றினை வைத்துள்ளேன். திங்கள்தோறும் பயின்று வருகிறேன். அது தமிழனுக்குரிய தன்மான உணர்ச்சியைத் தட்டி எழுப்புகின்றது. நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் ஊட்டுகின்றது. சென்ற தென்மொழியில் "பார்ப்பனப் பகைமை" என்னும் கட்டுரையைக் கண்டேன். அதில் திரு. ஆறுமுகனார் தங்களை வசைபாடி எழுதியுள்ளதைக் கண்டு என் மனம் வெடித்துக் கண்ணீராய்ப் பெருகியது. பார்ப்பனன் என்ன செய்யவில்லை! தமிழ்மொழியைக் கொலை செய்து கூறுபோட்டுள்ளான். பார்ப்பனரைப் பற்றி வரிக்குவரி திட்டினால் ஆறுமுகனார் ஏன் கவலைப்படுகிறார்? கடவுளை ஒழிப்பதில் அண்ணாவும், பெரியாரும் எம்முறையில் எவ்வழியில்தோற்றுவிட்டனர் என்பதை விளக்கிக் கூறச்சொல்லுங்கள்.

கடந்த காலத்தில் ஆரியன் தெருவிற்குள் தமிழன் நுழைய முடியுமா? அவனிடம் பேசமுடியுமா? பழகமுடியுமா? இற்றை ஞான்று அவர்களும் நாமும் சரிசமமாகப் பழகுகிறோமே எப்படி? யார் செய்த நன்மை? வடவர்கள் தமிழ் மொழியை எவ்வழியில் வளர விட்டார்கள்? இதனைச் சுட்டிக்காட்டினால் ஆறுமுகனார் போன்றவர்களுக்கு ஏன் சினம் வருகிறது? மதிப்பிற்குரிய மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயனாரைப் போன்றும், அய்யா பெரியாரைப் போன்றும் இற்றை உலகில் தோன்றவில்லையேல் தமிழ்மொழியும், தமிழர் இனமும் பண்பாடும் நாகரிகமும் சீர்குலைந்தன்றோ போயிருக்கும்!

ம. மணியன், திருவையாறு.

[ம. 67] பெரியார் தோற்றாரா?

அன்புடையீர்! சென்ற தென்மொழி இதழில் நெய்வேலி அன்பர் ஒருவர் உங்களுக்குக் கண்டனம் தெரிவித்திருந்தார். அறிவியல் நில உலகை விட்டு நிலா உலகை அடைந்துவிட்டது. அப்படியிருக்க, நாம் கடவுள் என்று நம்பிக்கொண்டு நம் நேரத்தையும் முயற்சிகளை

www.thamizham.net - Free E book No 7418

யும் அதற்காக விணடிப்பதைக் காணும் பொழுது உண்மையிலேயே என் உள்ளம் கொதிக்கிறது, மக்கள் மடையர்களாக இருக்கிறார்களே என்று. அண்ணாவும் பெரியார் அவர்களும் கடவுளை ஒழிப்பதில் தோற்றுவிட்டதாக நண்பர் குறிப்பிட்டிருந்தார். உண்மை அது வன்று. அவர்களின் வெற்றி வெளியில் தெரியவில்லையே தவிர, என்னைப்போல் பலரை எண்ண வைத்துள்ளது. மாந்தன் அறிவுக்கு எட்டாதது உலகில் உண்டு; அதற்குக் காரணம் உலகம் தோன்றிய பின்தான் அவன் உலகில் தோன்றினான்.

“அந்தத் தெரியாத ஒன்றைத்தான் நாங்கள் கடவுள் என்று சொல்கிறோம்” என்று இறைப்பற்றாளர்கள் கூக்குரல் இடுவதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். உண்மை அதுவானால்; ஏன் அதற்குப் பல கதைகள் கட்டிவிட்டு உலகை ஏய்க்கவேண்டும்?

மக்கள் அப்படிச் சொன்னால்தான் நம்புவார்கள் என்ற காலம் இருந்திருக்கலாம். அதனால் அப்படி சொல்லியிருப்பார்கள். மக்களில் பலர் விழித்துக் கொண்டார்கள்; இப்போது உண்மையை ஒத்துக் கொள்வதுதானே! ஏன் அதைச் செய்யவில்லை?

—கி. கு. பற்குணன், (வேதியல்) I. I. T. சென்னை-36

[ம. 68] தமிழர் கருத்துக்கு!

செந்தமிழ்ச் செம்மலே! வணக்கம்.

இக்கால் நடுவணரசுக்கும் மாநிலவரசுக்கும் நடைபெறும் தொடர்பு முறையில் ஒவ்வொரு மாநிலமும் நடுவணரசோடு தொடர்பு கொள்ளும் அறிக்கைகளனைத்தும் ஆங்கிலத்திலும்—உடனுக அதன் போலிகைப் படிவமொன்றை இந்தியிலும் விடுத்தல் வேண்டும். ஆனால் தனித்த முறையில் இந்தியில்மட்டும் இருப்பினும் ஏற்றுக் கொள்ளப்படும். அதனால் நடுவணரசுத்துறையில் பணிபுரிவோர் விரைவில் இந்தியில் தேர்வெழுதிக் குறிப்பிட்டவாறு தேர்ச்சியடைதல் வேண்டும். அவ்வாறு அவர்கள் பயின்று தேர்ச்சி பெறவில்லையெனில் அவ்வத்துறையிலிருந்து விலக்கப் பெறுவர் என்ற செய்தியைக் கண்ணுற்று உள்ளம் துணுக்குற்றேன்.

மேற் கூறிய செய்தியின் அடிப்படை நோக்கம்—உண்மை என்னவென்று சற்றே நுண்ணிதின் ஆய்வோமேயானால், நடுவணரசு இந்தியை எவ்வாறேனும் இந்தியா முழுமையும் வலிந்து கட்டளை

www.thamizham.net - Free E book No 7418

வாயிலாகவேனும் நுழைத்துவிட வேண்டுமெனத் துணிகின்றது என்ற உண்மை புலப்படும்.

நமது தமிழகவரசு தமிழகத்தே பள்ளிகள்தோறும் இந்தியை நீக்கியமையால் உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் மகிழ்வெய்துகின்றன வென்பது உண்மையே. இதற்கென இவ்வரசுக்கு நாம் நன்றிகூறும் கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம். இருப்பினும் இன்றைய நிலையில் நடுவணரசு செயற்படும் போக்கை எண்ணினால், தமிழகத்தில் உள்ள தமிழர்கள் இந்தி பயிலாத கரணியத்தால் நடுவணரசுப் பணிகளில் தொடர்ந்து பணிபுரிய இயலாத நிலையொன்று உருவாகி வருவதை உணரலாம். இந்நிலை மேலும் தொடருமானால் தமிழர்கள் வருங்காலத்தில் வேலையற்ற தன்மையும் பொருளடைவுத் தட்டுப் பாடும் கொண்டு அனைத்து வகைகளிலும் வாழ்க்கையில் இடர்ப்பாட்டையும், இன்னலையும் மேற்கொள்ள வேண்டிவரும் என்பது உறுதி. இவ்வாறான இழிநிலையிலிருந்து தமிழகம் மீட்சியுற்றுத் தமிழன் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ இன்றே முயலுதல் வேண்டும்.

நாம் பல வகையிலும் இந்தியை ஒதுக்கியும் தில்லியரசு உடும்புப் பிடியாக இந்தியை நீக்க மறுப்பதோடு மேலும் பல துறைகளிலும் நயமாகப் புகுத்தி வருகின்றது. இந்நிலைக்கு முடிவு காணாமல் நாம் முடங்கிக் கிடப்போமானால் அதன் முடிவு நாம் எண்ணிப்பார்க்கக்கூட முடியாததாகிவிடும். எனவே நம் தமிழகவரசின் மொழிக் கொள்கைப்படி தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழியும் பயின்றவர்களை நமது மாநிலத்திலிருந்து ஒவ்வோர் ஆண்டும் முறைப்படி நடுவணரசுப் பணிக்குச் சேர்த்துக்கொள்ள நாம் வற்புறுத்தவேண்டும். அவ்வாறு நம் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை யெனில் தமிழகத்தைத் தனிநாடாக தில்லியாட்சியிடமிருந்து விடுவித்துக் கொள்வதைவிட வேறு செம்மையான-சிறந்த வழி ஒன்றும் இருப்பதாக நமக்குப் புலப்படவில்லை.

–புலவர். அண்ணாமலை, நத்தம், வ. ஆ.

[ம 69] "நறைக தமிழ்மருத்துவம்"- தாங்களா எழுதினீர்கள்?

அன்புள்ள ஆசிரியருக்கு வணக்கம். தங்கள் ஆசிரியவுரை (இரட்டை, கடகம், தி. பி. 2000. சுவடி) கண்டு சொல்லொணாத் துய

ரில் மூழ்கினேன். முற்றுமுணர்ந்த தாங்களா இவ்வுரையை வரைந்துள்ளீர்கள்? எனக்கு இன்னும் ஐயப்பாடாகவே உள்ளது.

தங்கள் ஆசிரியவுரையின் அடிப்படை சரிவர அமையப்பெற வில்லை என்பது எனது எண்ணம். "ஆயுர்வேதம், சித்தம், யூனானி- இம்மூன்றையும் கலந்த கலவை மருத்துவம் போன்றதொரு மருத்துவ முறையைக் கற்பிற்கும் கல்லூரியே உள்ளது. அதுவும் ஒன்று. அஃது இருப்பதும் தமிழகத்தின் தெற்கே நெல்லை மாவட்டத்தில்-பாளையங் கோட்டையில்" எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். சித்தம் ஒன்றே இக் கல்லூரியில் கற்பிக்கப் பெறுகின்றது. இத்துடன் ஆங்கில மருத்துவமும் (Allopathy) புதிதாக இணைக்கப் பெற்றுப் புதியதொரு கலவை ஏற்படுத்தப் பெற்றுள்ளது. இந்நிலை தமிழ் மருத்துவத்தைத் தழைக்க வைக்க எங்ஙனம் வழிகோலும்? இந்தப் புதியதொரு கலப்பு ஏன்? இந்தியமுறை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் நடத்திய போராட்டத்திற்குக் கிட்டிய வெற்றியே இக்கலவைக்கு வழி கோலியுள்ளது. இக்கலவை தமிழ் மருத்துவத்திற்குக் கிடைத்த வெற்றியன்று. எதிர் கால வாழ்வுத்துயரை நீக்கக் கிடைத்த வெற்றி! இக்கலவைக்கு வித்து எங்கிருந்து கிடைத்தது? G. C. I M. பட்டப்படிப்பு இந்திய மருத்துவ முறையினைக் கற்பிக்கும் பொருட்டுச் சென்னை கீழ்ப்பாக்கத்தில் தொடங்கப்பெற்றது. ஆங்கில மருத்துவத் தின்பால் நாட்டங் கொண்டு (தமிழ் மருத்துவத்தைத் தழைக்கவைக்கும் நோக்கத்துடனன்று) அன்றைய மருத்துவ மாணவர்கள் தத்தம் வருங்கால வாழ்க்கையை அமைத்துக்கொள்ள ஆங்கில மருத்துவமே சிறந்தது என அறுதியிட்டுக்கொண்டனர். இதனை உணர்ந்த, முந்தைய அரசு பாளையில் கல்லூரியைத் தொடங்கித் தமிழ் மருத்துவத் தினைத் தழைக்க வைப்பதிலேயே நாட்டம் கொண்டிருந்தது. அங்கு ஆங்கில மருத்துவம் புதிதாகப் பிணைத்துப் புதியதொரு கலவை உண்டாகியிருக்கவில்லை. ஆனால் அரசு மாறியது. இன்றைய அரசு மாணவர்களின் அரசு! கலப்பு உருவெடுத்தது!

இப்பொழுது கூறுங்கள். ஏன் ஆங்கில மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கும், இந்திய மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கு மிடையே பூசல்? பூசலுக்கு வித்திட்டது யார்? பண்டாரகர் மேத்தா அறிக்கையின்படி அக்கல்லூரி (இந்திய மருத்துவக் கல்லூரி) செயல் படுத்தப்படுகிறதா? தமிழ் மருத்துவம் தழைக்குமா இந்நிலையில்?

www.thamizham.net - Free E book No 7418

மாணவர்களுக்கிடையே பூசலுக்குப் பிற காரணியங்களும் உள. ஆங்கில மருத்துவக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கே போதிய ஆசிரியர்களும் ஏந்துகளும் இல்லை. இந்நிலையில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவமனையில் பயிற்சியினை அக் குறைந்த ஆசிரியர்களைக் கொண்டு இந்திய மருத்துவக்கல்லூரி மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் நிலை - தாமும் கற்றாரில்லை; பிறரையும் கற்க விட்டாரில்லை என்ற நிலைக்கு ஒப்பு! இன்னும் ஒன்று கூறுவதானால் - ஆங்கில மருத்துவத்தில் அவர்கட்குக் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கு மிகையாகவே புகட்டப்படுகின்றனர். இப்பொழுது துடிப்பறிமானியைப் போராடி இந்திய மருத்துவக்கல்லூரி மாணவர்கள் ஏன் பெற்றார்கள் என்பது உங்களுக்குத் தெள்ளத் தெளிவாகப் புலனாகியிருக்கும். துடிப்பறிமானியைப் பயன்படுத்தும் எண்ணம் தமிழ் மருத்துவத்தைத் தழைக்கவைக்கும் எண்ணத்துடனா? கூறுங்கள்! துடிப்பறிமானியைப் பயன்படுத்துவதனால் தமிழ் மருத்துவம் தழைக்கும் என்பது உறுதியானால் எந்த ஒரு தமிழனும் துடிப்பறிமானியைப் பயன்படுத்துவதைப் பகடி செய்யமாட்டான்.

சுரமானியைப் பல்வேறு இல்லங்களிலும் பயன்படுத்துகிறார்கள். ஏற்றுக் கொள்வோம். துடிப்பறிமானியைப் பயன்படுத்துகின்றார்களா? இல்லை! சுரமானியைப் பற்றிப் பள்ளிகளிலேயே கற்பிக்கப்பெறுகின்றது. அதனைப் பயன்படுத்தும் முறையைத் தனியே ஒரு கல்லூரியிலும் கற்றுத் தெளியவேண்டிய கட்டாயமில்லை. இந்நிலையில் சுரமானியுடன் துடிப்பறிமானியையும் பிணைத்து எழுதுவது முறையன்று! மருத்துவ இயலுக்கு (Medicine) அடிப்படை உடலியலே (Physiology)! அவ்வுடலியலை ஒன்றரை ஆண்டுக் காலம் கற்றுப் பல்கலைக்கழகத் தேர்வில் தேர்ந்து மூன்று ஆண்டுக்காலங்கள் மருத்துவமனையில் பயிற்சிபெறும் ஆங்கில மருத்துவக்கல்லூரி மாணவர்களே அத் துடிப்பறிமானியை முற்றிலும் பயன்படுத்த அறிந்து கொள்ளும் நிலையை எய்தாதபோது, உடலியலைக் கற்றுணராத இந்தியமுறை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் குறுகிய சில திங்கட்குள் துடிப்பறிமானியைப் பயன்படுத்த அறிந்து கொள்ளும் நிலையை எங்ஙனம் எய்தவியலும்? கூறுங்கள்.

திருவள்ளுவர் கழுத்தில் துடிப்பறிமானியைத் தொங்கவிட்டவாறு, ஒரு படச்சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்ததைக் கண்ணுற்ற

www.thamizham.net - Free E book No 7418

தாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். வரையப்பெற்ற ஓவியம் திருவள்ளுவர் அன்று! நீங்களாகத் திருவள்ளுவர் எனக்கருதிக்கொண்டீர்கள் போலும்! பழமை பொருந்திய மருத்துவர் ஒருவரின் ஓவியமே, தாடியுடன் முனிவர் போன்று வரையப்பெற்றிருந்தது. (Refer: Parke–Dan's Advertisement) தமிழ் மருத்துவத்தைத் தாழ்த்தியெழுதிய உரைகளைத் தனிச்சுவரொட்டி யொன்றில் நீங்கள் கண்ணுற்றிருப்பின் அது வருந்தத் தக்கதே! ஒவ்வொரு தமிழனும் வெட்கி, வெறி கொள்ளவேண்டிய செயலே! தமிழ் (சித்த) மருத்துவத்தின்பால் உங்கட்குப் பற்றிருக்கலாம். அதற்காக ஆங்கில மருத்துவத்தைக் குறை கூறியிருக்க வேண்டா. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ் மறை வழியைத் தங்கள் ஆசிரியவுரையில் பின்பற்றி யிருக்கலாம். தமிழில் எங்ஙனம் வடமொழிச் சொற்களைக் கலந்து தமிழின் வளர்ச்சிக்குக் கேடுநினைக்கின்றோரைக் கண்டிக்கின்றீர்களோ அதைப் போல் தமிழ் மருத்துவத்தில் பிற மருத்துவத்தைக் கலக்க நினைப்போரையும் கண்டிக்க வேண்டுகிறேன்.

–சு. சி. கனி, பாவேந்தர் இல்லம் பாளையங்கோட்டை.

(ம. 70) உணர்ந்து தெளிக!

பெருமதிப்பிற்குரிய ஆசிரியருக்கு,

தென்மொழியன்பன் எழுதும் மடல். வணக்கம் பல. எதிர்பாரா நிலையில் ஒரு நாள் தென்மொழியைச் சென்னையிலுள்ள கன்னிமரா நூலகத்தில் கண்டு அன்றிலிருந்து தொடர்ந்து வாங்கிப் படித்து, தூய தமிழ் நடையினையும், பொருள் மிகுந்த தூய தனித்தமிழ்ச் சொற்கள் பலவற்றையும் கண்ணுற்று மட்டிலா மகிழ்வெய்திய நாட்கள்பல. தமிழுக்கு நலனென்று கருதிய விடத்து யாராயிருந்தாலும் அவர் தம் செயலை உளமாரப் போற்றியும், இழிவு நிகழ்ந்த விடத்துத் தூற்றியும் எழுதும் தங்களின் தமிழ்ப்பணியினை என்னென்றுரைப்பது!

இவ்வாறிருக்க, தென்மொழியின் கடந்த கடகம்–இரட்டை இதழில் 'பார்ப்பனர் பகைமை' எனும் தலைப்பிட்டு, நெய்வேலி அன்பர் திரு. ஆறுமுகனார் எழுதிய மடலையும் கண்டு வருந்தினேன். யானும் ஆறுமுகனாரைவிட இந்துமதமான எம்மதத்தின்மேல் அளவிலாப் பற்றுடையவன். தமிழையும், தமிழர்தம் மதங்களான சைவத்தையும்

www.thamizham.net - Free E book No 7418

திருமாலியத்தையும் இரு கண்ணெனப் போற்றுபவன். தென்மொழி பார்ப்பனர் பகைமையை வளர்ப்பதாக எழுதியிருக்கின்றார் அன்பர். பார்ப்பனர்கள் அமைதியாகவும் மறைமுகமாகவும், தமிழுக்கும் தமிழருக்கும் இழைக்கும் தீங்குகளை இவர் சற்று ஊன்றிக் கவனித்தாரானால் அறிவார். இங்கு, சென்னையில் பார்ப்பனரால் நடத்தப்படும் குழுமங் (கம்பெனி) களிலும், அவர்களால் தலைமையேற்று நடத்தப்படும் அமைப்புகளிலும் எவ்வாறு தமிழர்க்கு வேலையளிக்காமலிருப்பதிலும், தமிழுக்குத் தீங்கிழைப்பதிலும் கண்ணும் கருத்துமாகச் செயல்படுகின்றனர் என்பது ஆழ்ந்து பார்த்தால்தான் தெரியும். எடுத்துக்காட்டாக ஒன்று கூறுவேன். அண்மையில் மைசூர் அரசிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் காவேரி நீர்பற்றி நிகழ்ந்தசிக்கல் யாவரும் அறிந்ததே. அதுபற்றிப் பார்ப்பனச் செய்தித்தாளான 'தினமணி' தலைப்பெழுதுகிறது "காவேரி ஜலம் சென்னைக்கில்லை" என்று. இவ்வாறு இன்னுமெவ்வளவோ எடுத்துக்காட்டலாம்.

மேலும் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களைத்திட்டி எழுதியதாகக் கண்டனம் தெரிவிக்க வந்தாரே, இதே தென்மொழி ஆசிரியர் சுவடி 6 ஓலை 2இன் ஆசிரிய உரையில்,

"வடவர்கள், பார்ப்பனர்கள், ஆதித்தன் கும்பல் போன்றவர்களால் ஏற்பட்ட குமுகாய ஒழுக்கச் சீர்கேடுகளை, நூறு குன்றக்குடிகளும், கிருபானந்தவாரிகளும் மூலிகைமணி ஆசிரியர்களும் வந்தாலும் சொல்லாலோ, சமயவுணர்வாலோ மருந்து மனவியல்களாலோ அகற்றிவிட முடியாது என்பதை எல்லாத் தமிழர்களும் தெள்ளிதின் உணர்ந்து கொள்க" என்று வாரியார் அவர்களைப் புகழ்ந்தெழுதியிருப்பதை இவர் படித்ததுண்டா? நுனிப்புல் மேய்வதுபோலத் தென்மொழியைப் படித்துவிட்டு உட்கருத்தை உணராமல், உணர்ச்சிவயப்பட்டு மடல் எழுதினால் மற்றவர் அஞ்சுவர் என்று எண்ணினரோ? வடலூரடிகள் கொள்கைகள் வளரவேண்டுமென்று விரும்புகின்றாரே, அவ்வடிகளாரே தம் திருவருட்பாவிலும், உரைநடை எழுத்துகளிலும் வடமொழி, வடநெறி, வடவர் பழக்கவழக்க மடமை ஆகியவற்றை எதிர்த்து எழுதியுள்ளாரென்பதைப் படித்துணர்ந்து உள்ளம் தெளிவாராக.

தென்மொழியாசிரியரின் கருத்துகள் தமிழகத்தில் பகைமையை வளர்க்குமானால் பார்ப்பனர்கள் தமிழர்களின்மேல் கொண்டுள்ள உட்பகைமையைவிடப் பன்மடங்கு குறைவாகத்தான் உறுதியாக இருக்க முடியும், இனியாகிலும் இவர் பார்ப்பனரின் செயல்களை ஆழ்ந்து நோக்கி அவர்தம் கயமையை உணர்ந்து தமிழுக்கும் தமிழருக்கும் ஆக்கமும் ஊக்கமும் தேடுவாராக.

—அன்பன். தூ. நா. சக்திவேல் என்னும் தமிழ்நெஞ்சன், சென்னை-24.

www.thamizham.net - Free E book No 7418

தொல்காப்பிய எழுத்ததிகார இயல்களின் இடப்பொருத்தமும் பெயர்ப்பொருத்தமும்

பேராசிரியர் க. ப. அறவாணன், க. மு.

தொல்காப்பியர் சிறந்த ஒரு மொழிநூற் புலவர். இதில் எவ்வகை மாற்றுக்கருத்தும் இல்லை. எனினும் அவரது முழுமை பெற்ற தொல்காப்பிய நூலுக்கு வேற்றுமொழி இலக்கணங்களும் உதவினவா என்ற வினா இன்றும் எழுந்துகொண்டிருக்கின்றது. அவர் காலத்தில் வடமொழி உறவும் செல்வாக்கும் வலுவாகிவிட்டன என்பதைச் சொல்லதிகாரம்-401, 402 நூற்பாக்கள் வெளிப்படையாக உறுதி செய்கின்றன. இலக்கணம் சொல்லும் அளவுக்கு மொழியில் குடியேறிவிட்ட வடமொழி, தொல்காப்பியரின் ஏனைய படைப்புகளிலும் தன் சாயலைக்காட்டி நிற்கிறதா? இது விடை இறுக்கப்பட வேண்டிய வினா. அவற்றுள் முதலாவது ஒன்பது ஒன்பது என்ற இயற்பகுப்பு வடமொழிப் பாணினியத்தில் உள்ள ஒன்பது ஒன்பது என்ற பகுப்பின் செல்வாக்கா?

எழுத்ததிகாரத்தில் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல்-என நிரல்பட ஒன்பதியல்கள் உள்ளன.

இவற்றுள் மரபு-என்று மூன்றியல்களும், மயங்கியல் என இரண்டு இயல்களும், இயல் என இரண்டு இயல்களும், புணரியல் என இரண்டு இயல்களும் பெயர் பெற்றுள்ளன. இவ்வொன்பதியல்களும் வீரசோழியக் காலத்தில் சந்திப்படலம் என ஓரியலாகி, நேமிநாதக் காலத்தில் எழுத்ததிகாரம் எனச்சுருங்கி, நன்னூலில் தொல்காப்பிய ஒன்பதியல்கள், 1. எழுத்தியல் 2. பதவியல், 3 உயிரீற்றுப் புணரியல் 4. மெய்யீற்றுப் புணரியல் 5. உருபுப்புணரியல் என ஐந்தியல்களாக ஆயினதுமன்றி 483 நூற்பாக்கள் 202 நூற்பாக்களாக அடங்கிவிட்டன. இலக்கண விளக்கக்காரரும் ஐந்து இயல்களே கூறினர். பிற்காலத்து முத்துவீரியம் காலத்தில் எழுத்தியல், மொழியியல், புணரியல் என்று மூன்றாகி விட்டது. இவற்றை இங்கே காட்டுவதன் நோக்கம், தொல்காப்பியரின் ஒன்பது இயல்கள் பிற்காலத்துக் குறைக்கப்பட்டே வந்துள்ளன என்பதை எடுத்துணர்த்தவே. அங்ஙனமாயின், பின் வந்த இலக்கண நூலார் அனைவரும் எழுத்திலக்

www.thamizham.net - Free E book No 7418

கணத்தை உணர்த்த ஒன்பதியல்கள் வேண்டா எனக்கருதினரா? ஆம். ஆன்ட்ரோர் அவ்வாறு கருதியதன் விளைவுதான்—இயற்சுருக்கம், நூற்பாச் சுருக்கம் என்பனவாகும். இற்றைய மொழிநூலாரும் தொல்காப்பியத்தில் கூறுவனவற்றை Phonemics-, Morpho-Phonemics Transformation rules-என மூன்றில் அடக்கிவிடலாம் எனக் கருதுகின்றனர்.

இந்தச் சுருக்கம் முறையானதுதானா என்பதை ஒவ்வோரியலின் அடிப்படையையும் எடுத்தாய்ந்தால் விளங்கிவிடும்.

I. நூன்மரபு: 33 நூற்பாக்கள் உள்ளன. இவ்வியலில் எழுத்து இனைத்து எனவும், இன்ன முறைய எனவும், இன்ன அளவின எனவும், இன்ன வடிவின, இன்ன பொருள (31, 32) எனவும், இன்ன வரவின (22-30) எனவும் விளக்கப்படுகின்றன.

பெயர்க்காரணம்: இதன் பெயர்க்காரணத்தை இளம்பூரணர் முதல் சிவஞான முனிவர் ஈறுக ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகக் கூறுகின்றனர். அவை வருமாறு:

அ. இளம்பூரணர்: "இவ்வதிகாரத்தில் கூறப்படும் எழுத்து இலக்கணத்தை ஒராற்றால் தொகுத்துணர்த்துதலின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயித்து."

அங்ஙனமாயின் எழுத்ததிகார மரபு எனப்படுவதன்றி நூன் மரபு எனப்படாது எனச் சிவஞான முனிவர் மறுத்தனர்.

ஆ. நச்சினார்க்கினியர்; "இத் தொல்காப்பியம் என்னும் நூற்கு மரபாந் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்துணர்த்தினமையின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயிற்று" என்றனர்.

இவ்வோத்துள் கூறப்பட்டன செய்கையோத்திற்கும், செய்யுளியலுக்கும் கருவியாவதன்றி, மூன்றதிகாரத்திற்கும் பொதுவாகாமையின் அதுவும் பொருந்தாது எனச் சிவஞான முனிவர் மறுத்தனர்.

இ. சிவஞான முனிவர்: "நூலினது மரபு பற்றிய பெயர் கூறுதலின் நூன்மரபு" எனப்பட்டது என்றனர்.

அவ்வாறு கோடல் ஒராற்றால் அமையுமாயினும், அவர் கூறியவாறு எழுத்தின் பெயர்களே அன்றி நூன்மரபு பற்றிவரும் பெயரனைத்தும் ஈண்டுக் கூறப்படாமை குன்றக் கூறலாம். ஆகலான் அது

www.thamizham.net - Free E book No 7418

வும் உண்மைப் பொருளன்று எனத் திரு. வேங்கடராசலு (இரெட்டியார்) மறுத்தனர்.

௩. பி. சா. சு. சாத்திரி: "இந்நூலின்கண் வழங்கப்படும் எழுத்து குற்றெழுத்து, நெட்டெழுத்து, உயிர், மெய், வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து, என நூற்கு இன்றியமையா மரபு பற்றிய குறியீடுகளை விதிக்கும் இயலாதலின் இவ்வியல் இப்பெயர் பெற்றது" என்றார்.

௪. இரா. வேங்கடராசலு: "நூல் என்பது ஈண்டு எழுத்தைக் குறித்து—அவ்வெழுத்துகளின் இயல்பைக் கூறியதால் இவ்வியல் இப்பெயர் பெற்றது" என்றனர்.

எனினும் அவரே நூல் என்பது எழுத்தைக் குறித்ததற்குத் தக்க மேற்கோள் இன்மையின் இதுவும் ஆராயத்தக்கதே என எழுதினர்.

முடிவு: ஒன்றற்குப் பெயர் இடுவது அதனை வழக்கில் எடுத்தாளுதற் பொருட்டேயாகும். அந்நிலையில் இவ்வியலில் எழுத்துகள் பலவற்றிற்கும் பெயரிட்டிருப்பது அதனைப் பின்னரும் எடுத்தாளுதற் பொருட்டே யாகலானும் அங்ஙனமே மூன்றதிகாரத்துக்கும் இக்குறியீடுகள் எடுத்தாளப் பட்டிருப்பதனாலும் சிவஞான முனிவர் கருத்தே மிக்க பொருத்தமுடையது. சாத்திரி, வேங்கடராசலு ஆகியோர் கருத்துகளும் சிவஞான முனிவர் கருத்தை ஒட்டியனவே.

மரபு—என்ற சொல் பெய்திருப்பதன் நோக்கம்: இப்பெயர் பெறும் இயல்களிற் கூறப்படும் குறியீடுகள் எல்லாம் ஆசிரியர் தாம் இயற்றினவை அல்ல; தமக்கு முன்னுள்ளோர் குறியிட்டவையே என்பதை விளக்குவதற்காக இருக்கலாம். இதனை, 'எழுத்தெனப்படுப', 'குற்றெழுத்தென்ப', 'நெட்டெழுத்தென்ப', 'மெய்யென மொழிப', என அவர் சுட்டுவனவற்றால் உணரலாம். சொல்லதிகார 'விளிமரபு' என்ற பெயரும், பொருளதிகார 'மரபியல்' என்ற பெயரும்—இதே அடிப்படையில் அமைந்தனவாகலாம்.

இடப்பொருத்தம்: மொழியின் அடிப்படையான ஒலிகளை, அவற்றின் பெயர்களை—எடுத்து விளக்கும் இயல். பின்வரும் இயல்களுக்கு முன்னோடியாதலின்—இவ்வியலை முதற்கண் இட்டது முற்றப் பொருத்தமே. அடுத்துப் பேசப்படுவது 'மொழிமரபு' எனும் இயல்.

www.thamizham.net - Free E book No 7418

II மொழிமரபு:

அ. இளம்பூரணர்: 'மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப்பட்டது. இதனுள் கூறுகின்றது தனிநின்ற எழுத்திற்கன்றி மொழியிடை (நின்ற) எழுத்திற்கு என உணர்க'

ஆ நச்சினார்க்கினியர்: மேல் எழுத்துணர்த்திப் பின்னர் அவை தம்முள் தொடருமாறும் உணர்த்தி அவ்வெழுத்தானும் மொழியது மரபு உணர்த்துகின்றமையின் இவ்வோத்து மொழிமரபு எனக் காரணப் பெயராயிற்று.

எழுத்து நிலை நின்று மாறி, மொழித்தன்மை விளக்கும் தொடுத்தஇயல்—அடுத்த இயல்—இவ்வியலாதலின் இப்பெயர் பெற்றது என்பது உரைகாரர்தம் விளக்கங்களால் அறிந்த செய்தி. அன்றியும் தனிநின்ற எழுத்துப்பற்றி இவ்வியல் பேசாது என்பது இளம்பூரணர் கருத்து. இரண்டையும் மனங்கொண்டு நோக்கின், உயிர் எழுத்தாம் தன்மையினின்று சுட்டுப்பொருளுக்கு மாறிய சுட்டெழுத்தையும், வினு எழுத்தையும், மொழிமரபில் கூருமல் நூன்மரபில் கூறியிருப்பானேன்? மொழிமரபு தனி எழுத்துப்பற்றிப் பேசாது எனில் ஐ என்ற நெட்டெழுத்துப் பற்றி

'அகர இகரம் ஐகாரம் ஆகும்' (54) எனவும்,

ஔ என்ற நெட்டெழுத்துப் பற்றி

'அகர உகரம் ஔகாரம் ஆகும் (55) எனவும் மெய்யைப்பற்றி,

'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் (46) எனவும் மொழிமரபில் பேசுவானேன்? என்ற வினுக்களை எழுப்பி ஆராயும் போது மொழிமரபு, நூன்மரபினின்று திட்டமிட்ட வரையறையுடன் வேறுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்றே தோன்றுகிறது. மொழி மரபு முதல் ஒன்பது நூற்பாக்களும் (34-42 வரை) நூன்மரபின் ஒழிபு நூற்பாக்கள் என இளம் பூரணர் குறிப்பதினின்று இக்கருத்தை வலிவுபடுத்திக் கொள்ளலாம். அன்றியும், 46, 47, ஆம் நூற்பாக்கள் வழுவமைதியாதலின் நூன்மரபில் கூறப்படாமல் மொழிமரபில் கூறப்பட்டதென இளம்பூரணர் குறிக்கிருர். வழுவமைதி குறிப்பதாயின் அது நூன்மரபின் ஈற்றில் புறனடையாகச் சேர்க்கப்பட்டிருக்கலாமே? அவ்வாறு ஏன் சேர்க்கப்படவில்லை?

நூன்மரபில் 22 முதல் 30 வரை மெய்ம்மயக்கம் கூறுகின்ற நூற்பாக்கள். ஆனுல் இதே போன்று மெய்ம்மயக்கம் கூறும் (Three Clusters)

www.thamizham.net - Free E book No 7418

"அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ?—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

நூல்: **கலை நிலவு** (பாத்தொகுப்பு)

ஆசிரியர்: அன்புநிலவன்.

வெளியீடு: கலைச்செல்வி பதிப்பகம், பாகூர் (புதுவை மாநிலம்.)

விலை: உருபா இரண்டு.

பாவலர் அன்புநிலவனுரின் நாற்பத்தேழு பாடல்களைக்கொண்ட தொகுப்பு நூல் இது. பாடல்கள் தமிழ், இயற்கை, காதல், வாழ்வு என நாற்பகுதிகளாக அடக்கப் பெற்றுள்ளன. இக்காலத்தில் பரவலாக வரும் பாத்தொகுப்புகளைப் போலன்றி இவ்வெளியீடு அழகும் பயனும் சிறந்து விளங்குகின்றது. பாடல்கள் இயற்கை உணர்வோட்டம் நிரம்பி, பழகு தமிழில் அழகுபெற விளங்குகின்றன.

(முன்பக்கத் தொடர்ச்சி)

யரழ என்னும் மூன்றும் முன்னொற்றக்

கசதப ஙஞநம ஈரொற்றாகும் (48) என்ற நூற்பாமட்டும் மொழி மரபில் பதினைந்தாம் நூற்பாவாகக் கிடக்கிறது. இதற்கு இளம்பூரணர் தரும் அமைதி நிறைவு தருவதாயில்லை. மொழியிடை எழுத்துகளை நூன்மரபில் பாதி உணர்த்திவிட்டு மறுபாதியை மொழிமரபில் உரைத்து, இடையில்வரும் எழுத்துகளை (22–30) முதற்கண் கூறி, இருபத்தெட்டு நூற்பாக்களில் பல செய்திகளைப் பேசிவிட்டு வேறோர் இயலில் முதல், இறுதி எழுத்துகளைப் பேசுவதன் பொருத்தம் நமக்கு விளங்கவில்லை நன்னூலார் மூவகை நிலைகளையும் முதல்–இறுதி–இடை (102—107—110) என்று அமைத்திருத்தல் காண்க. இவற்றையெல்லாம் நோக்க, நூன்மரபிற்கும், மொழிமரபிற்கும்–இடையே பெருத்த தவிர்க்க முடியாத வரையறைக்கோடு–இல்லை. ஆதலின் இரண்டையும் ஓரியலாகவே பேசினுல் என்ன என எண்ணத்தோன்றுகிறது.

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7418

முல்லை மலர்க்காடே! முத்த தமிழே! என்
செல்வக் குழந்தாய்! நற் சிந்தையுறு பூந்தேனே!
வெல்லற் கரும்பொருளே! அம்மே! நின் மேன்மையினைச்
சொல்லித் தொழவேயென் உள்ளம் துடிக்கிறதே!

—என்று ஆசிரியர் தமிழைப் பற்றி எண்ணித் துடிக்கின்ற பாடல்கள் அவரின் தணிப்பறியாத் தமிழ்ப்பற்றுக்குச் சான்று பகர்கின்றன.

ஆசிரியரின் கற்பனைத் திறனுக்கு ஏராளமான பாட்டடிகளை எடுத்துக் காட்டலாம்.

"மண்பறிக்க வந்தநெடு வேலோ? அன்றி
வானரசன் மண்மங்கைக் களித்த முத்தோ?

பண்படிந்த பாவாணர் சொல்லோ? இந்தப்
பனிமழைக்கிங் கெவ்வுவமை சொல்லுவேனோ?"

என்றும்,

"காலிடையே நீருருளும்; குடையின் மீது
கற்றச்சன் சிற்றுளியின் ஓசை கேட்கும்"

என்றும் அவர் 'மழை' யைப் பற்றிக் கூறும் கற்பனைகளும், உவமைகளும், நயங்களும் மகிழ்ந்து பாராட்டத்தக்கன. "மழையிரவு" நல்ல இயற்கை ஓவியம்!

"கடலில் துயில் கதிரோன், கண்கள் மலர்ந்திடுமுன்
படரிவ் வுலகத்தில் நீர்தெளித்துப் பைங்கோலம்
இடுகின்ற பெண்ணோ எழிலேந்தும் மூடுபனி?"

"காலைப் பொழுதை யழகால் கமழ்விக்கும்
கோலப் பொருளே! குளிர்மழையின் நற்றோழி!"

—என்று மூடுபனியை ஆசிரியர் அழகுபட விளிக்கின்றார். அவரின் கற்பனை உள்ளம் கடல், சிறுமலரே, வான்பறவை, நாங்கள், போன்ற பாடல்களில் விரிந்து சிறகடித்து இலக்கிய வானில் பறந்து திரிவதைப் பார்க்கலாம்.

"இரவும் பகலும் அலைவாயால்
யாரை இங்கே அழைக்கின்றாய்?

மருவிக் காதல் புரிந்தவுடன்
வாடவிட்டுச் சென்றவன் யார்?

—என்று கடலிடம் அவர் பேசும் காட்சி மிக நன்று. வான்பறவை நாங்கள் புதுமை பொலியும் புரட்சிப் பாடல்.

www.thamizham.net - Free E book No 7418

"உலகத்துக் கவலையெல்லாம் தலைதெறிக்க ஓட
உயரத்தில் பறக்கின்றோம் வான்பறவை நாங்கள்"

—என்று பாடிக்கொண்டே போகும் பறவைகளோடு ஆசிரியரும் பொதுமை வானில் நீந்துவதைப் பாடல் காட்டுகின்றது.

"சாதிமதம் நம்மை யென்னசெய்யும்?" "இருண்ட நாட்டில் ஒளி தர வேண்டும் எழுந்திடுவாய்" போன்ற பாடல் வரிகளில் குமுகாயத் திருத்த வேட்கை கொப்பளிக்கின்றது. கூவியழை, உலகம் உனதுடைமை, என்றென்றும் ஏழைகளா? —ஆகிய பாடல்களில் பொதுவுடைமை முரசு கொட்டப்படுகின்றது.

"அன்றோர் இரவினிலே" அழகிய கற்பனைக் கருத்து நிகழ்ச்சி. தெறித்தோடும் உணர்ச்சிகள் சிற்சில சொற்களில் நெளிந்து உள்ளத்தை உலுக்குகின்றன.

நூலுள் வந்திருக்கும் அத்தனைப் பாடல்களும் அழகுடையன, ஒளியுடையன, உணர்வுடையன என்று கூறிவிட முடியாது. ஆங்காங்கே இலக்குவியல்களும் இருக்கத்தான் செய்கின்றன. சிறந்தனவற்றை மட்டும் தேர்ந்திருக்கலாம். பூவோடு தழைகளையும் விலைபோக்கும் மாந்தவுள்ளம் பாவலனுக்கு இருத்தல் கூடாது.

அன்னாய்! உனக்கொரு தீமை—ஈங்கு
அணுகிட நான்விட மாட்டேன்

—என்று தமிழ்த்தாயிடம் உறுதி கூறும் ஆசிரியர் கவிதை, வீரம், பாதகர், விந்தை, சங்கம், ஆசை, வேதனை, காணிக்கை—போன்ற வடசொற்களை மிடைந்திருக்க வேண்டா.

"கறையிருக்கும் என்பாட்டில்; அதனால் அன்றோ
கலைநிலவை இந்நூலின் பெயராய் வைத்தேன்!"

—என்று கூறுவது அடக்கம் ஆகுமே யன்றி அவற்றுக்கு அமைதியாகிவிடாது.

மொத்தத்தில் பாவலர் அன்புநிலவனாரின் "கலை நிலவு" சுவைத்துப் பாராட்ட வேண்டிய தேனடை. இடையிடையே சில கோதுகள் தென்படலாம். அவற்றை நீக்கி விடலாம்.

—குட்டுவன்.

www.thamizham.net - Free E book No 7418

(சுவடி 7 ஓலை 5, 6-கூடு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவியற் கலைச்சொற் பட்டி-4.

(அழகப்பர் தமிழ்மன்றம், காரைக்குடி)

Period-கால இடைவெளி
Periodic Function-இடை வெளிச் சார்பு
Permeability-காந்த இசைத் திறன்
Permittivity-மின்னிசைத் திறன்
Permutation-சீரமைப்பு
Perspective View-தொலைத் தோற்றம்
Phase-தகைவுநிலை
Phase Angle-தகைவுக் கோணம்
Phase Difference-தகைவு நிலை வேறுபாடு
photograph-ஒளிப்படம்
photon-ஒளியிம்மி
photo synthesis-ஒளிச்சேர்க்கை
phylum-பெருங்குடி
physics-புறவியல்
physiology-உடலியல்
pitch-புரியிடைவெளி
piles-சுமைத்தூண்கள்
pilot-வலவன்
pivot-தாங்குமுனை
primary waves-முதனிலை அலைகள்
probability-கூடுகை('கூடும்' என்பதன் வழியாக)
product-பெருக்கம்
property-நிலையியம்பி(Thermo Dynamics)
purlin-கைம்மரம்
putty-மக்கு

Plan-தளத்தோற்றம், திட்டம்
Plastics-நெகிழிகள்
Plug-செருகி
Pleasure car-மகிழுந்து
Polarisation-மின்வாய் இழிதல் (chem.)
,, அதிர்திசை ஓர்மம் (light)
Plywood-ஒட்டுப்பலகை
Polish-மெருகு
Polyphase-பல்தகைவு நிலை
Polyphase Generator } பல்தகைவு மின்னாக்கி
Positive Ion-நேர்மின்னணு
Potential-மின்னழுத்தம்
potential barrier-மின்னழுத்த அரண்
potentialdifference-மின்னழுத்த வேறுபாடு
potential divider-மின்னழுத்தக் கூறி
potential gradient-மின்னழுத்த மாறுவேகம்
power-திறன்
power factor-திறனெண்
precipitation-வீழ்படிவு
principal rafter-வெட்டுக்கை
prism-பட்டகம்
probe particle-ஊடுருவு துகள்
procedure-செய்முறை
projections-அதைப்புகள்
protron-மாநேர்மின்னி
pump-இறைவை
push wave-தள்ளலைகள்

www.thamizham.net - Free E book No 7418

Q

Quality-தரம்
Quanta-ஆற்றல்இம்மி
Quarry-கல்லெடுகுழி
Quenching-தணித்தல்

R

Radar-தொலைக்கணி
Radio activity-கதிர்வீச்சு
Raft Foundation-புணை
Range-எல்லை [யடித்தளம்
Rattle Snake-கிலுகிலுப்புப் பாம்பு
Reactance-கிளர்வுத்தடை
Reactor-அணுவுலை
Rectifier-ஒருவழிப்படுத்தி
Reduction Formulae | குறைப்பு வாய்பாடு
Reflection-எதிரொளி
Refraction-ஒளிவிலகல்
Reheater-மறுவெப்பேற்றிகள்
Relative velocity-வேகம் (இலக்கியச்சொல்)
Relativity Theory-தொடர்பு நிலைக் கோட்பாடு
Reluctance-காந்தத்தடை
Respiratory Tract-உயிர்ப்புப் பாட்டை
Resins-பிசின்கள்
Resistivity-தடையெண்
Resultant-நிகரம்
Retardation-ஒடுக்கம்
Rheostat-மாறுமின்தடை
Rise-உயர்வு
Rivet-அறையாணி
Roof Ridge-கூரைமுகடு
Rotor-சுழலி
Rotor Wing-சுழலிறக்கை
Rough-செரசொரப்பான
Rudder-சுக்கான்
Rocket-கோளெய்தி

S

Salinity-உப்புநிலை
Saliva-உமிழ்நீர்
Sap-மரப்பால்
Saprophytes-மக்குண்ணிகள்
Satellite-துணைக்கோள்
Scale (of Boiler)-கலன்பற்று
Scattering-சிதறல்
Schist-தகட்டுப்பாறை
Sea gulls-ஆலாப்பறவை
Section-குறுக்குவெட்டு
Seed Coat-விதையுறை
Sedimentation-படிவு
Sedimentary Rock-படிவுப் பாறை
Segmental Arch-வட்டுக்கவான்
Segregation-பிரிந்துதிரளல்
Self weight-தன்னெடை
Semi Conductor-பகுதிக்கடத்தி
Series Circuit-தொடர்மின்சுற்று
Serum-ஊனீர்
Sequence-வரிசைமுறை
Setting-இறுகுதல்
Shell-கூடு
Shift-பெயர்ச்சி
Shock Waves-அதிர்வு அலைகள்
Short Circuit குறுக்கு இணைப்பு
Signal-சைகை
Singularity-ஒருமைத்தன்மை
Sink-வெப்ப ஏற்பி
Sissu Tree-எட்டிமரம்
Site plan-இடப்படம்
Slide Calipers-நழுவளவி
Slide Rule-நழுவுக்கணி
Sludge-கக்கம்
Smudge pots-கனப்புச் சட்டிகள்
Soilless Culture-மண்ணிலா வேளாண்மை

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7418

போராட்டம் என்று காண்பாய்?

-மணிவேலன்-

1. 'குடியாட்சித் தலைவர்முதல் அலுவலகக் காவலுக்குக்
குந்தி, வாயிற்
படியாட்சி நடத்துகின்ற பணியாளன் வரையினிலும்
பதவி ஏற்க
குடிகெடுக்கும் சாதியெனும் கழுதைவந்து தடையாகக்
குறுக்கே நிற்க
முடியாது! முடியாது! நாமறிவோம்!' என்றெல்லாம்
முழங்கல் வேண்டா!

2. நாடாளும் அமைச்சரென நான்வரலாம்; நீர்வரலாம்,
நல்ல காசு
தேடுதற்கு வாய்ப்பான மருத்துவராய் மாங்காட்டுத்
தீத்தான், குப்பன்,
'கூடுமியான்', அந்தோனி-யாருக்கும் தகுதிபெறக்
குறுக்கீ டில்லை!
ஏடேந்தும் ஆசிரியர் பணிக்குவரச் 'சாதிப்பேய்'
இடைநிற் காது!

3. 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் கருத்தளிக்கும் கருத்'தென்று
கனியச் சொல்லும்
நல்லாரே! 'அவனி'ருக்கும் கோவிலிலே இறையன்பில்
நாட்டங் கொண்டு
சொல்லொழுகும் பாடலினால் வழுத்திநின்று படிமத்தைத்
துணைக்கை நீட்டி
எல்லாரும் தழுவுவதற்குக் கூடுமெனும் உரிமைமட்டும்
இல்லை யன்றோ?

4. படிமத்தைத் தொடுதற்கும் பாலாலே முழுக்காட்டிப்
பட்டு வேட்டி
இடையினிலே உடுத்துதற்கும், மலர்மாலை சூட்டுதற்கும்
உரிமை யார்க்கு?
கடைகெட்ட பூணூலின் திருமேனி மட்டுந்தான்
கருவ றைக்குள்

www.thamizham.net - Free E book No 7418

இடைத்தரக ஞய்நிற்க எச்சட்டம் உரிமையினை
ஈந்த திங்கே?

5. திருமாலின் கோவிலிலும் திருநீற்றுன் கோவிலும்
தீந்த மிழ்ப்பா
ஒருநாளும் பாடுதற்கே உரிமையிலே எனுந்தடையை
ஒப்புக் கொண்ட
பெருஞ்சட்டம் உள்ளதுவோ? ஒப்புரிமை என்பதெலாம்
பித்த லாட்டம்!
கருவறைக்குள் ஒருதமிழன் கால்வைக்கக் கூடாதாம்!
கயமை யன்றே?

6 இந்திமொழி இந்நாட்டின் அலுவலக மொழியென்றே
இயம்பும் சட்டம்
செந்தீயில் இரையாகச் செய்துவிட்டார் மாணவர்கள்!
தோள்பு டைத்தோம்!
இந்நாட்டின் சட்டத்தை உடைப்பதற்கே துணிவுகொண்ட
இளைஞர் கூடத்
தொந்திசரி 'பூணூலின் திருமேனி' கண்டக்கால்
துவளல் என்னே?

7. கோவிலினைக் கட்டியவன் தமிழன்தான்; விளக்கெரிக்கக்
கொட்டும் நெய்க்கே
ஆவினத்தைக் கொடுத்ததுடன் அரிசிக்கு நிலமீந்தோன்
அவனே யன்றே?
ஆவியெலாம் உருக்குகின்ற தனித்தமிழைப் பாடுதற்கே
ஆரே உள்ளார்?
ஆவியினைப் பறிக்கின்ற வடமொழியை உதிர்க்கின்றுன்!
ஐயோ! கெட்டோம்!

8. பிறநாட்டில் வாழ்கின்ற தமிழன்தான் நோகின்றுன்!
பிறந்த மண்ணில்
'மறையாளர்' அடிமையென மானத்தை விலேபேசி
மடமை மூழ்கிக்
குறைப்பிறப்பாய்-ஊன்தடியாய்-நடைப்பிணமாய்-ஆண்
பேடாய்க் குறிக்கோ ளின்றி

www.thamizham.net - Free E book No 7418

இறைவணக்க உரிமைக்கே இடமின்றிக் கிடப்பதுவோ
தமிழன் இங்கே?

9. பார்ப்பானை விலக்குகின்ற சீர்திருத்தத் திருமணத்தைப் பண்டைக் கால
நேர்முறையில் நடத்துதற்குத் தனிச்சட்டம் கொண்டுவந்-
தான் நெஞ்சில் நின்ற
பார்புகழும் தனித்தமிழன்! படிமமென நின்றுவிட்டான்!
பைந்த மிழ்க்கு
யார்தடையைச் செய்தாலும் எதிர்த்திட்டான்! அவன்வழி-
யில் ஏன் தயக்கம்?

10. கோவிலிலே பார்ப்பான்தான் பூச்சார்த்தி என்கின்ற
கொடுமை தன்னை
நீவிலக்கப் போராட்டம் நடத்துதற்குத் துணிவின்றி
நிற்பா யென்றால்
நாவலிக்க உரிமைபற்றிப் பேசுவதில் பயனில்லை!
நாணம் விட்டே
ஏவலுக்குக் காத்திருக்கும் அடிமைதான்! போராட்டம்
என்று காண்பாய்?

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க் கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனி இதழ் :	75 காசு.	90 காசு.	1 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7418

விலங்குகளின் உணவுப் பழக்கங்கள்

ந. முத்துக்குமாரசாமி, அறி. இ., ஆ. ப.

விலங்குகளை அவற்றின் உணவுப் பழக்கங்களைப் பொறுத்து மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர்.

அ. தழையுண்ணிகள் (Herbivores)

ஆ. ஊனுண்ணிகள் (Carnivores)

இ. தோட்டிகள் (Scavangers)

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு விலங்குக் கூட்டம் வாழ வேண்டுமானால் அதன் உணவுப்பழக்கமும் வாழ்க்கை முறையும் அச் சூழ்நிலைக்குப் பொருத்தமானதாக இருக்கவேண்டும். விலங்குகளின் உணவுப்பழக்கத்தையும் வாழ்க்கை முறையையும் விலங்கியலார் "நிக்கு" (Nich) என்ற சொல்லால் சுட்டுவர். உலகில் சூழ்நிலைகள் ஒரே வகையாகவா இருக்கின்றன? எனவே "நிக்கு"களும் வெவ்வேறு வகைப்படுகின்றன.

அ. தழையுண்ணிகள்: பயிரினங்களை உணவாகக் கொள்ளும் விலங்குகளைத் தழையுண்ணிகள் என்கிறோம். ஒவ்வொரு வகைப் பயிரினமும் ஒவ்வொரு வகை விலங்கினத்தால் உண்ணப்படுகிறது. விலங்குகளின் உணவுகளுக்கெல்லாம் அடிப்படை பயிரினங்களே தழையுண்ணிகள் மேலும் சிறு குழுக்களாகப் பிரிக்கப்படும்.

(க) நிலப்பரப்பில் வளரும் புல்லை உணவாகக் கொள்ளும் விலங்குகளைப் புல்மேய்வன (Grazing forms) என்றழைப்பர்.

(உ) மரக்கிளைகளில் உள்ள தழைகளை உணவாகக் கொள்ளும் விலங்குகளைத் தழைமேய்வன (Brousing forms) என்றழைப்பர்.

(ங) சில பூச்சிகள் பயிர்ச்சாற்றை உணவாகக் கொள்கின்றன. சில பூச்சிகளின் லார்வாக்கள் இலைகளைத் துளைத்துக்கொண்டு இலைச் சாற்றை யுறிஞ்சி யுண்ணுகின்றன. இவற்றை இலையுண்ணிகள் (Leaf mions) என்பர்.

(ச) தேனீக்கள் மகரந்தத்துகள்களின் மீதுள்ள மதுவை உணவாகக் கொள்கின்றன. இவை மகரந்த உண்ணிகள் (Pollen feeders) எனப்படும்.

www.thamizham.net - Free E book No 7418

(ஞ) மைலாபிசு (Mylabis) என்னும் வண்டு, இன்னும் சில பறவைகள் மலர்களின் இதழ்களை யுணவாகக் கொள்கின்றன. இவை இதழுண்ணிகள் (Petel feeders) எனப்படும்

(சு) வௌவால் போன்ற விலங்குகள் கனிகளை உணவாகக் கொள்வதால் அவை கனியுண்ணிகள் (Frugivors) எனப்படும்.

(எ) கொறித்துண்ணும் விலங்குகளான (Rodents) அணில் முதலியன கொட்டைகளை உணவாகக் கொள்கின்றன.

எனவே ஒரு செடியின் எல்லா உறுப்புகளும் உண்ணப்படுகின்றன. ஆதலின் இவை எல்லாவற்றையும் பொதுவாகத் தழையுண்ணிகள் என்றழைக்கின்றனர்.

ஆ. ஊனுண்ணிகள்: மற்ற விலங்குகளை உணவாகக் கொள்ளும் விலங்குகளை ஊனுண்ணிகள் என்கிறோம். பொதுவாக ஊனுண்ணிகள் தழையுண்ணிகளைத் தின்கின்றன எனலாம். ஊனுண்ணிகள், கொல்லைகள் (Predators) சாறுண்ணிகள் (Parasites) என மேலும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

கொல்லைகள்: சிறு விலங்குகளைக் கொன்றுண்ணும் விலங்குகளைக் கொல்லைகள் என்பர். கொல்லைப் பிரிவைச் சேர்ந்த விலங்கினங்கள் (Species) உலகில் குறைவு. அவ்வினங்களிலுள்ள தனி விலங்குகளின் (Individuals) எண்ணிக்கையும் குறைவாகவே இருக்கும். ஒவ்வொரு தழையுண்ணி விலங்கையும் பல்வேறு கொல்லை இனங்கள் (Predatory species) உண்ணுகின்றன. அரிமா, புலி, சிறுத்தை முதலிய பல்வேறு இனத்தைச் சேர்ந்த கொல்லைகள் தழையுண்ணியாகிய மானை உண்ணுகின்றன. கொல்லைகள் தங்கள் வாயில் கொள்ளும் அளவு பருமனுள்ள விலங்குகளையே உணவாகக் கொள்ள இயலும். பெரிய மீன்கள் சிறிய மீன்களை உண்ணுகின்றன. சில மீன்கள் குஞ்சுகளாக இருக்கும்பொழுது கொல்லைகளுக்கு அகப்பட்டுக்கொள்கின்றன; அவை வளர்ந்து பருத்துவிட்டால் கொல்லைகள் உண்ண இயலா.

உணவுத்தொடர்: (Food chain) உணவுப் பழக்கத்திற்கேற்ப விலங்குகள் பல 'நிக்கு' களாகப் பிரிக்கப்படும் என்று சொன்னோம். இரையாகும் விலங்குகளின் பருமனில் ஒருவகையான ஒழுங்கு காணப்படுகின்றது. இவ்வொழுங்கை உணவுத்தொடர் (Food chain) என்பர் ஓர் உணவுத் தொடரில் பல கொல்லைகள் இருக்கின்றன. அத்

www.thamizham.net - Free E book No 7418

தொடரின் தொடக்கம் பெரும்பாலும் ஒரு பயிரினமாக இருக்கும். தொடரின் இறுதியில் வேறெந்த இயற்கைப் பகையுமில்லாத பெரிய கொல்லை இருக்கும். இடையிலிருக்கும் கொல்லைகள் அவற்றின் பருமனுக்கேற்ப வரிசையாக அமையும். இடைப்பட்ட கொல்லைகளின் எண்ணிக்கை தொடக்கத்திலுள்ள இரை உயிரியின் பருமனைப்பொறுத்தது. தொடக்க இரை பெரிதாக இருக்குமானால் உணவுத்தொடரில் குறைவான இடைக் கொல்லைகளே இருக்கும். எடுத்துக்காட்டாக அரிமாவின் உணவுத்தொடரை எடுத்துக் கொள்வோம். இலைகள் தொடக்க இரை. இலைகளைத் தழையுண்ணி மான் உண்ணுகின்றது. மானை அரிமா உண்ணுகின்றது.

ஆனால் தொடக்க இரை மிகச் சிறியதாக இருக்குமாயின் இடைப்பட்ட கொல்லைகளின் எண்ணிக்கை மிகுதியாகும். காட்டாக, கடலில் சங்கிலிப் பாசிகள் (Diatoms) எனும் மிகச்சிறிய நுட்ப உயிரிகள் இருக்கின்றன. இவற்றைக் கொண்டு நம் தொடரைத் தொடங்குவோம். சங்கிலிப் பாசிகளைத் துடுப்புக் காலிகள் (Copepods) உண்ணுகின்றன. துடுப்புக் காலிகளை மீன் புழுக்கள் (Fish larvae) உண்ணுகின்றன. இவற்றை மீன்குஞ்சுகள் (Young fishes) உண்ணுகின்றன. சிறிய மீன்கள்-பெரிய மீன்கள்-பறவைகள்-மாந்தன் மாந்தனை வேறெந்த விலங்கும் உண்ணாததால் மாந்தனுக்கு மேலும் இயற்கைப் பகை இல்லை. தொடக்க உயிர் நுண்ணியதாதலின் இவ்வுணவுத்தொடரில் இடைப்பட்ட உயிரிகளின் எண்ணிக்கை மிகுதி. இதே போன்று இன்னொரு வகையான தொடரையும் பார்ப்போம். புதுப்புனலிலுள்ள சங்கிலிப்பாசிகளை நுண்ணுயிரிகள் உண்ணுகின்றன. இவற்றைக் கொசுப்புழுக்கள் (Mosquito larvae) உண்ணுகின்றன. கொசுப்புழுக்களைத் தட்டாம்பூச்சிப் புழுக்கள் (Dragon fly larvae) உண்ணுகின்றன. இவற்றை வாத்துகள் உண்ணுகின்றன. வாத்துகளை மாந்தன் உண்ணுகிறான். மாந்தன் இறுதிக்கொல்லை (Final Predator) யாகிறான்.

உணவுத் தொடர் நிகழ்ச்சியை முதன்முதலில் கண்டறிந்தவர் செல்போர்டு. ஆண்டு 1930. பின்னர், பல்வேறு இறுதிக் கொல்லைகளின் உணவுத் தொடர்கள் உற்றுநோக்கப்பட்டுக் கணிக்கப்பட்டன. பலவகையான மீன்களின் உணவுத் தொடர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உணவுத் தொடரைக் கணிப்பதென்பது அவ்வளவு எளிய செயலன்று. ஒவ்வொரு நிலையிலும் பல இரைகளும் கொல்லை

www.thamizham.net - Free E book No 7418

களும் இடையில் நுழைகின்றன. காட்டாக, வாத்தின் உணவுத்தொடரைக் கவனிப்பதாக வைத்துக் கொள்வோம். கொசுப் புழுக்களை வேறு சில்வகை மீன்களும் உண்டுவிடுகின்றன. அதனால் நம் உணவுத் தொடர் இடையில் அறுந்துபட நேரிடுகிறது. கடலில் மிதக்கும் நுட்பஉயிர் வகைகளையும் (Planktons) மீன் குஞ்சுகளையும் வேறு சில கடல் ஊனுண்ணிகள் தின்றுவிடுகின்றன. பெரும்பாலும் தொடக்க இரையிலிருந்து இறுதிக் கொல்லை வரை ஆறு நிலைகளுக்கு மேலிருப்பதில்லை. உணவுத் தொடரிலுள்ள இடைப்பட்ட கொல்லைகளின் பருமன் வரவரப் பெருத்துக்கொண்டே வருவதைக் காணலாம். தொடக்க இரைகள் உருவிற் சிறியனவெனினும் எண்ணிக்கையில் மிகுதியாயிருப்பதையும் காண்க. உணவுத் தொடரிலுள்ள இடைப்பட்ட கொல்லைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டேவரப் பருமனில் பெரிதாகிக் கொண்டே வருவதையும், இறுதிக் கொல்லையினம் மிகப்பெரிய உருவினதாயும் மிகக் குறைவான எண்ணிக்கையுடையதாயும் இருப்பதையுமறிக இவ்வுலகிலுள்ள ஒவ்வோர் உயிரியின் தலையாய நோக்கம் தன் இனம் இவ்வுலகில் அழியாது நிலைக்க வேண்டுமென்பதுதான். எனவே உணவுத் தொடரின் தொடக்கத்திலுள்ள இரைகள் கொல்லைகளிடமிருந்து தம் இனம் தப்பிப் பிழைக்க ஏராளமான அளவில் தம் இனத்தைப் பெருக்குகின்றன. அவற்றின் வலிமை எண்ணிக்கையில் அடங்கியிருக்கிறது. எல்லா உயிர்களும் அழியாதிருக்க இயற்கையின் ஏற்பாடுதான் எவ்வளவு நுட்பமாக அமைந்திருக்கிறது பார்மின்! இது நிற்க. தொடக்க இரைகள் எண்ணிக்கையில் பெருகினால்தான் உணவுத்தொடர் முறிவின்றித் தொடரும். உணவுத் தொடரில் பின்வரும் நிலைகளிலுள்ள விலங்குகள் உருவில் பெருத்து எண்ணிக்கையில் சுருங்குகின்றன. தொடக்க இரையிலிருந்து இடைப்பட்ட கொல்லைகளை இறுதிக் கொல்லை வரை எண்ணிக்கை அடிப்படையில் அடுக்கி வைப்போமாயின் அவை ஒரு கூம்பு வடிவாயமையும்.

உணவுத் தொடரானது பொருளடைவு முகாமையுடையது. ஓரிடத்திலுள்ள பல்வேறு கொல்லைகளின் உணவுத் தொடரை யறிவது மீன்வளர்ப்புத்துறை போன்ற பொருளடைவு விலங்கியற்றுறைகளின் தலையாய வேலையாகும். காட்டாகச் சப்பானியர் மீன்களின் உணவுத் தொடரை ஆய்கின்றனர். இத் தொடரை வைத்துத்தான் ஒரு குறிப்பிட்ட மீன் கூட்டம் கடலின் இந்தப் பகுதியில் இந்த நாளில் தோன்றும் என்று முன்கூட்டியே சொல்லிவிடுவர். இதனால் சப்பானில் மீன்பிடித்தல் தொழில் மிகச் சிறந்த முறையில் விளங்குகிறது. கடலில் மிதக்கும் நுட்ப உயிர்வகைகளைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ந்து கவனித்து வரவேண்டும். அப்பொழுது தான் மீன்கூட்டம் தோன்றுவதை முன்கூட்டியே அறிவிக்க இயலும். மிகுதியான நுட்ப உயிர்வகைகள் மிகுதியான துடுப்புக் காலிகளை

www.thamizham.net - Free E book No 7418

வரவழைக்கின்றன. அவை மேற்கொண்டு தொடரை வளர்க்கின்றன. இடைப்பட்ட கொல்லைகளுக்கு ஏதாவதோர் எதிர்பாராத இடையூறு நிகழுமானால் உணவுத்தொடரின் பின்வரும் கொல்லைகள் தடுக்கப் படுகின்றன. கடலிலுள்ள நுட்ப உயிர்வகைகளைச் செயற்கையாகப் பெருக்கினால் மீன்கள் பெருகும். இந் நுண்ணுயிர்களைப் பெருக்கு வதற்காகக் கடலில் செயற்கை உரம் (Artificial fertilizers) இடு வதுமுண்டு.

சாறுண்ணிகள்: உணவுக்காகப் பிற விலங்குகளின் உடலி லுள்ள சாற்றையோ அல்லது குருதியையோ சார்ந்திருக்கும் ஊனுண் ணிகளைச் சாறுண்ணிகள் என்பர். அட்டை, முகட்டுப்பூச்சி (Bug) கொசு முதலியன இவ் வகையைச் சார்ந்தன. சாறுண்ணிகள் கொல் லைகளைவிட உருவிற் சிறியன.

கொல்லைகளுக்கும் சாறுண்ணிகளுக்கும் இடைப்பட்ட ஊனுண் ணிகளும் உள. காட்டாக லாமஃப்ரி (Lamphreys) என்னும்உயிரிகள் மீன்களின் உடற்றோலைக் கிழித்துக் குருதியை உறிஞ்சிக் குடிக் கின்றன. மீன்களின் உடற்றோலைக் கிழிப்பது கொல்லைகளை யொக் கும். குருதியை உறிஞ்சுவது சாறுண்ணியின் செயலையொக்கும்.

இ. தோட்டிகள்: இறந்த விலங்குகளின் உடலிலுள்ள பொருள்களை யுண்ணும் விலங்குகளுக்குத் தோட்டிகள் என்று பெயர்.

சில தோட்டிகள் விலங்குகளின் இறந்த உடல்களை உணவாகக் கொள்ளும். இவற்றைப் பிணந்தின்னிகள் என்பர். காட்டு: கழுகு, காகம், ஓநாய் முதலியன. இவை அழுகும் பிணங்களை யுண்டு அவ் விடத்தைத் துப்புரவு செய்துவிடுவதால் மற்ற விலங்குகள் அங்கு வாழுதல் எளிதாகின்றது.

ஓரிடத்தில் வாழும் பல்வேறு விலங்குகளின் எச்சங்கள் குவியு மாயின் அங்குக் குச்சில் (Bacteria)கள் பெருகி நோய் உண் டாக ஏதுவாகும். இவ்வெச்சங்களைப் பந்துபோல் உருட்டிச்சென்று அவ்விடத்தைத் துப்புரவாக்குகின்றன. மாட்டின் சாணம், மாந்த மலம் இவற்றைச் சாணியுருட்டி வண்டு (Dungrollers)கள் உருட்டிக் கொண்டு செல்வதைக் கண்டிருக்கக் கூடும். இந்தச் சாண உருண் டைகள் நிலத்தினடியில் புதைக்கப்படுவதால் அவ்விடம் தூய்மையுறு கின்றது.

எனவே ஓரிடத்திலுள்ள இறந்த அழுகிய உடல்களையும் வெளி யேற்றப்பட்ட கழிவுப் பொருள்களையும் அப்புறப்படுத்துவதன் மூலம் அவ்விடத்திலுள்ள பல இன விலங்குக் கூட்டங்கள் தூய்மையான— அமைதியான வாழ்க்கை நடத்தத் தோட்டிகள் உதவுகின்றன O

www.thamizham.net - Free E book No 7418

தேனியல் சோன்சின் கருத்தும் தமிழ் ஒலியன் அமைப்பும்

தாயம்மாள் அறவாணன், க. மு.

"Tamil is a language which illustrates particularly well the grouping of several quite distinct sounds into single phonemes. It is noteworthy that Tamil orthography does not show any difference between all these sounds. Those who originally invented this orthography must have had a clear conception of the phonemic idea, though the theory had never been formulated." — Daniel Jones.

சிறந்த முறையில் தனித்தனி ஒலியன்களில் பல்வேறு மாற்றொலிகளை அடக்கிக் காட்டுகின்றது தமிழ். தமிழ் எழுத்துமுறை மாற்றொலி வேறுபாட்டைக் கருதாமை குறிப்பிடத் தக்கது. ஒலியன் கொள்கை தோன்றாத தொன்மையான காலத்திலேயே தமிழ் எழுத்து முறையை உருவாக்கியவர்களுக்கு ஒலியன் பற்றிய அறிவு இருந்திருக்க வேண்டும் என்று தேனியல் சோன்சு என்பவர் "ஒலியனும் அதன் இயல்பும் பயனும்" ["The Phoneme, its Nature and Use-' P. 22] என்ற நூலில் கூறியுள்ளார்.

தமிழ் எழுத்து முறையை உருவாக்கியவர்களுக்கு ஒலியன் பற்றிய அறிவு இருந்தது என்பதை விளக்குமுன் ஒலியன் கொள்கை என்று தோன்றியது.? ஒலியன் கொள்கை என்றால் என்ன? என்பன பற்றி நாம் அறிதல் வேண்டும். ஒலியன் கொள்கை செக்கசுலோவோகியாவின் தலைநகரான 'பிரேக்' என்ற நகரிலுள்ள பிரேக் குழுவினரால் உருவாக்கப்பட்டது. அக்குழு ஒலியனைப் பற்றிச் செம்மையாக ஆய்ந்து தெளிந்துள்ளது.

ஒலியன் என்னும் சொல்,பரு அணு (Molecule) அல்லது அணு (Atom) என்னும் சொற்கள் வேதியலிலும் (Chemistry), நொதுமம் (Neutron) நேர்மம் (Protron) என்ற சொற்கள் அணு மைய இயல்பியலிலும் (Neuclear Physics) எப்படி இன்றியமையாதவையாகக் கருதப்படுகின்றனவோ, அப்படி மொழியியற்கு இன்றியமையாத அடிச்சொல்லாகும்.

ஒலியனின் பண்புகளைப்பற்றி மொழியியலார் நுண்ணியதாக ஆய்ந்து கண்டுள்ளனர். ஒலியன் பேச்சு மொழியின் மிகச்சிறு கூறு.

www.thamizham.net - Free E book No 7418

தனக்கென் ஒரு பொருளில்லாதது. பொருளை வேறுபடுத்துகின்ற ஆற்றல் பெற்றது. ஒலி ஒப்புமையும் இடவேற்றுமையும் உடைய மாற்றொலியன்களின் தொகுதியாய் அமைவது.

தம்பி, கம்பி இரண்டிலும் த க இரண்டும் தனித்தனி ஒலியன்கள். இவை இரண்டும் மேலும் பகுக்க இயலா அளவுக்குச் சிறிய கூறுகளாய் அமைந்துள்ளன. இவற்றிற்கென்று தனிப்பொருள் எதுவுமில்லை. இரண்டும் பொருளை மாறுபடுத்துகின்றன. இவை மொழி முதல் இடை கடைகளில் அமைந்து பொருளை மாறுபடுத்துகின்றன. இவ்வாறு பொருளை மாறுபடுத்தும் வன்மை உடைமையினாலேயே இவை 'ஒலியன்' (Phoneme) என அழைக்கப்படுகின்றன.

தலை, கலை-த க என்ற இரண்டும் மொழி முதலில் நின்று பொருளை வேறுபடுத்துகின்றன.

கனி-பழம்; கணி-மதிப்பிடு—ன், ண் என்ற இரண்டும் இடையில் நின்று பொருளை மாறுபடுத்துகின்றன.

கன்னம், கன்னல் (கரும்பு) என்ற இரண்டிலும் ம், ல் இரண்டும் மொழியீற்றில் நின்று பொருளை வேறுபடச் செய்கின்றன. எனவே மொழி முதல் இடை கடைகளில் நின்று பொருளை மாறுபடுத்தி, தனக்கென ஒரு பொருள் இல்லாத தன்மை உடையினவாய்ப் பேச்சு மொழியின் மிகச் சிறு கூறுய்-அடிப்படை ஒலிகளாக இருப்பனவே ஒலியன்கள் எனப்படும். இதனையே தொல்காப்பியர் முதல் எழுத்து (அடிப்படை ஒலியன்கள்) என்ற குறியீட்டால் குறிப்பிட்டார்.

ஒலியன்:- ஒலிஒப்புமையும் (Phonetic similarity), ஒவ்வோர் ஒலியும் ஒவ்வோர் இடத்தில்தான் வரும்; ஒன்றின் இடத்தில் வேறொன்று வராது என்ற இடவேற்றுமையும் (Complementary distribution) உடைய மாற்றொலியன்களின் தொகுதியாய் அமைவது ஒலியன் ஆகும்.

பத்து — 10

பஃது — 10

ஈண்டு த், ஃ என்பன மொழியிடையில் வந்து மிகச் சிறு கூறுகப் பயின்றனவேனும் பொருள் மாறுபாடு உண்டாகவில்லை. இவ்வாறு இடமாற்றத்தால் ஒலிமாற்றம் உண்டாதலன்றி பொருள் மாற்றம் உண்டாக்காத ஒலியன்களை மாற்றொலியன் என்பர். ஃ, த் என்பதன் மாற்றொலியனாகும். இவ்வாறு பல மாற்றொலியன்கள் சேர்ந்ததே

www.thamizham.net - Free E book No 7418

ஓர் ஒலியன் (A phoneme is a class of allophones) என்பர் கிளி சன் (P. 162).

இவற்றைத்தான் தொல்காப்பியர் சார்பு எழுத்து என்ற குறி யீட்டால் குறிப்பிட்டு, அவை எழுத்துகள் (ஒலியன்கள்) அல்ல; எழுத்துகளைப் போன்றவை எனும் பொருளில் எழுத்தோரன்ன என்று குறிப்பிட்டார்.

எழுத்தெனப்படுப

அகர முதல் னகர இறுவாய் முப்ப∴ தென்ப'- முப்பது எழுத்துகளே எழுத்துகளாகச் (Phoneme) சொல்லப்படுபவை என்று தொல்காப்பியரும்,

'உயிரும் உடம்புமாம் முப்பது முதலே'

என நன்னூலாரும் சொல்லிச் செல்கின்றனர். தொல்காப்பியர் எழுத்து என்று சுட்டுவது ஒலியனைத்தான் (Phoneme). தொல்காப் பியப் பாயிரமும் 'மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி' என்று கூறுவதால் தொல்காப்பியத்துள் எழுத்து முறை தெளிவாய் உள் ளது என்பது தெளிவு.

தொன்னூலார் குறிக்கும் முப்பது எழுத்துகளும் பொருளை வேறு படுத்தும் ஆற்றல் உடையவை. தமக்கெனத் தனிப் பொருள் இல்லா தவை. மேலும் பகுக்க இயலா மிகச் சிறு கூறுகளாக அமைபவை. எனவே இவை தனித்தனி ஒலியன்கள்.

அலை — ஆலை

எடு — ஏடு

இன்று — ஈன்று

என நிற்கும் அ, ஆ, எ, ஏ இ, ஈ என்பன பொருளை மாறுபடுத்தும் அடிப்படை. உயிர் ஒலியன்களாக உள்ளன. மெய்கள் ஒலியனுமாறு முன்னர்க் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழில் முதல் எழுத்துகளாகிய பதினெட்டு மெய்யும் பன்னிரண்டு உயிரும் ஆக முப்பதும் ஒரு சொல்லில் ஒன்று நின்ற இடத்துப் பிறஎழுத்துகள் வருமாயின், பொருள் மாறுபாடு ஏற்படும்: ஆகவே அவை முப்பதும் தனித்தனி ஒலியன்கள்.

தமிழில் மாற்றொலியன்களுக்குத் தனி வரிவடிவு இல்லை. (குற்றியலுகரம் குற்றியலிகரம் ஆய்தம் என்பன புள்ளியிட்டு அக் காலத்து வேறு படுத்தப்பட்டன. எனினும் இக்காலத்து இல்லை.)

www.thamizham.net - Free E book No 7418

பலமாற்றொலியன்களை ஒலியன்களிலேயே உள்ளடக்கிக்கூறும் தன்மை தமிழில் உண்டு.

க எனும் முதல்ஒலியன் மூன்று மாற்றொலிகளை உடையது. கடல்—மொழிமுதலில் க ஒலிப்பில் மெல்லண்ணத் தடையொலி (Voiceless Velar Stop)

அகம்—மொழியிடையில் இரண்டு உயிர்களுக்கு நடுவில் க-ஃக என்று ஒலிப்பில் மெல்லண்ண உரசொலி (Voiceless Velar fricative)

அழகு-மொழியிடையில் மூக்கொலிகளின் பின் க, g(க), என்று ஒலிப்பு மெல்லண்ணத் தடையொலி (Voiced Velar stop)

'க' என்ற ஓர் ஒலியனுக்கு மூன்று மாற்றொலிகள் உள்ளன. இதுபோன்றே ச, ட, த, ப என்பனவும் மாற்றொலி வேறுபாட்டைக் கருதாது ஓர் ஒலியனிலேயே அடக்கிக் காட்டும் தன்மை யுடையவை. ஆங்கிலம் போன்று K, H, G என்று வரிவடிவு அமைத்து மிகுதிப் படுத்தாமல் தமிழ் தன் எழுத்து முறையைச்சுருக்கிக் கொண்டுள்ளது. மேலும் பொருள் வேறுபாடு தரா மாற்றொலிகளுக்கு எழுத்து முறையில் தனி வரிவடிவு தேவை இல்லை என்பர் இற்றை மொழியியலார் அறிஞர் வெண்ட்ரியே (Vendryes):

'That the number of phonemes in a Language can not of course be calculated by the number of signs in its alphabet. Languages generally have more sounds than signs. This is the case in French, Italian, English and German [Language-P-34] என்று குறிப்பிடுகிறார். தமிழிலுள்ள இவ்வமைப் பையே கால்டுவெல் (Convertibility of surds and sonats) என்று குறிப்பிடுகின்றார். பல மாற்றொலியன்களை ஒரு வரிவடிவில் அடக்கிக் கூறும் திறத்தையே சோன்சு எடுத்துக் காட்டித் தமிழ் அமைப்பைப் பாராட்டுகிறார்.

தமிழ் எழுத்து முறையின் சிறப்பு ஏனைய மொழிகளின் எழுத்து முறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மேலும் தெளிவாகத் தென்படுகிறது. தமிழ் எழுத்து முறையை ஆங்கில எழுத்து முறையோடு ஒப்பவைத்து எண்ணிப்பார்க்க வேண்டும். ஆங்கில மொழியில் எழுத்துக் கூட்டிற்கும் [Spelling] ஒலிக்கூட்டிற்கும் [Pronunciation] தொடர்பின்மையைக் காணலாம். ஆங்கிலத்தில் Can என்ற சொல்லில் முதல் எழுத்து 'C' ஒலிக்கூட்டில் 'K' ஆக ஒலிக்கப்படு

www.thamizham.net - Free E book No 7418

கிறது. ஓர் ஒலியன் வேறு சில ஒலியன்களின் ஒலிப்பையும் பல ஒலியன்கள் ஓர் ஒலியனின் ஒலிப்பையும் பெறுதலைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

all — ஆ
and — அ
air — ஏ

என 'a' என்ற ஒரே வடிவு அதனினும் வேறுபட்ட 'ஏ' யைக் குறிக்கவும் வழங்குகிறது.

Meat, Meet, Scene, Niece

இவற்றிலுள்ள ea, ee, e, ie, என்பன ஒரே ஒலிகளையே தருகின்றன. மேலும் சில ஒலிகள் ஒலிக்கப்படுவதே இல்லை.

Psychology, Knife, Honour, White, என்பனவற்றுள் p, k, h, e ஆகியன ஒலிக்கப்படுவதில்லை [Unsounded]. இந்த அமைப்பைப் பெர்னாட்சா நகைச்சுவையாகக் குறிப்பிடும் போது fish என்ற சொல்லை ghoti என்றுதான் கூறுவேன் என்றார். அதற்கு அவர் காரணம் கூறும்போது, laugh என்ற சொல்லில் உள்ள 'gh' 'f' என்ற ஒலியையும், Women என்பதில் உள்ள 'o' 'i' என்ற ஒலியையும், Nation என்பதிலுள்ள 'ti' 'sh' என்ற ஒலியையும் தருகின்றன. எனவே ghoti என்பது 'fish' என்ற ஒலியைப் பெறுகிறது என்று விளக்கினார். மேற்கூறியதிலிருந்து ஆங்கிலத்திற்கு எழுத்துக் கூட்டு ஒன்றாகவும் ஒலிக்கூட்டு வேறொன்றாகவும் அமைந்துள்ளமை காணலாம். தமிழின் அமைப்பு இவ்வாறு வேறுபாடுடையதன்று. இட அளவில் [Position] வேறுபடாமல் தன்மையில் [Manner] வேறுபட்ட மாற்றொலியன்களையே க, ச, ட, த, ப என்ற முதல் ஒலியன்கள் தம்மகத்துக் கொண்டுள்ளன. அன்றியும் தமிழ் எழுத்துக்கூட்டு ஒன்றாகவும் ஒலிக்கூட்டு அதற்கு மாறான ஒன்றாகவும் [ti என்பது sh என்பதில் உள்ளமை போல] பெற்றுள்ள அமைப்பன்று.

தமிழில் முப்பது முதல் எழுத்துகளும் தனித்தனி ஒலியன்கள். நாம் எவ்வாறு ஒலிக்கிறோமோ அவ்வாறே எழுதுகிறோம். நம் முன்னோர் இப்பொருள்படவே 'மொழியாய்த் தொடரினும் முன் அனைத்தெழுத்தே [நன்: 127] என்றும் 'மொழிப்படுத்திசைப்பினும் தெரிந்து வேறிசைப்பினும் எழுத்தியல் திரியா என்மனார் புலவர் [தொல்: 53] என்றும் கூறியுள்ளனர். தமிழ் எழுத்தின் ஒலிகள் மாலையில் உள்ள

www.thamizham.net - Free E book No 7418

ஒவ்வொரு மலரும் தெளிவாகத் தோன்றல்போல ஒலியமைப்புடையன: சுண்ணும்பில் கலந்துவிட்ட மஞ்சள் போலத் தன்னளவை இழந்து விட்ட அமைப்புடையன அல்ல என்னும் கருத்துப்பட நன்னூல் உரைகாரர் சங்கர நமச்சிவாயர், 'எழுத்து சுண்ணத்தின்கண் அரிசன [மஞ்சள்] முதலிய போலாது மாலையின்கண் மலர்போல் நிற்றல் [127, உரை] என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் இயல்பாக எழுதுவது ஒலியின் குறியீடாக [phonemic transcription] அமைந்துள்ளது. ஆங்கிலத்தில் இயல்பாக எழுது வது ஒலியன் குறியீடாக அமைவதில்லை. ஆங்கிலத்தில் ஒலியன்கள் முப்பத்து நான்கு; வரிவடிவங்களோ இருபத்தாறு. உயிர் ஒலியன்கள் ஒன்பது என்று கிளிசனும் எட்டு என்று தேனியல் சோன்சும் கூறு வர். அவற்றினுடைய வடிவங்கள் ஐந்தே. அவை a e i o u. ஆங் கிலத்தில் ஒலியன் அல்லாத q-வும் அதன் எழுத்து முறையில் இடம் பெற்றுள்ளது. தமிழில் முப்பது ஒலியன்கட்கும் முப்பது வரிவடி வங்கள் உள. ஆங்கிலத்தோடு ஒப்பிடுகையில் தமிழ் எழுத்து முறை உயர்ந்து நிற்கின்றது.

மொழியியலார் தடையொலிகள் [Stops] என்று குறிப்பிட் டவை ஆறையும் தமிழ் நூலார் வல்லினம் என்பர். மூக்கொலிகள் [Nasals] எனும் ஆறையும் மெல்லினம் என்பர். ஆறு தடையொலி களுக்கு ஏற்ற ஆறு மூக்கொலிகள் பெற்றுள்ள சிறப்பைக் கொண் டது தமிழ் எழுத்து முறை.

மேற்கண்டவற்றால் தமிழ் எழுத்துமுறை மாற்றொலி வேறுபாட் டைக் கருதாது அவற்றுக்குத் தனி வரிவடிவம் கொடாது ஓர் ஒலிய னுக்குள்ளே அடக்கிக் கூறும் தன்மையும், முப்பது ஒலியன்கட்கும் முப்பது வரிவடிவங்கள் உள்ளமையும் எழுத்துக் கூட்டும் ஒலிக்கூட் டும் ஒன்றாகவே பெற்றுள்ளமையும் புலனும். ஆதலால் ஆங்கிலத்தி னும் சிறந்த தமிழ் எழுத்து முறையைக் கிறித்து பிறப்பதற்கு முன்பே உருவாக்கிய நுண்மாண் நுழைபுலம் மிக்க நம் முன்னோர் களுக்கு இருபதாம் நூற்றாண்டுத்தொடக்கத்தில் பிரேக் குழுவினரால் தோற்றுவித்த ஒலியன் பற்றிய அறிவு இருந்தமை குறித்து தேனியல் சோன்சு கூறுவது மெய்ம்மையின் பாற்பட்டதே. O

www.thamizham.net - Free E book No 7418

ஆய்வுக்கட்டுரை.

தமிழின் பழைய வரிவடிவும் அதன் புதிய ஒலிவடிவும்

"THE OLD TAMIL SCRIPTS AND ITS REFORMED NEW SOUNDS"

பேராசிரியர். மு. உலகநாதன்.

ஒலி எழுத்துகள்

1.	உயிரெழுத்து (அ-ஔ)	12
2.	மெய்யெழுத்து (க்-ன்)	18
3.	உயிர்மெய்யெழுத்து (க-னௌ)	216
4.	ஆய்தவெழுத்து (ஃ)	1
	ஆக	247

இவை தமிழ்மொழியின் வரிவடிவும் ஒலிவடிவுமாகும்.

மேலேகண்ட 131 வரிவடிவிலிருந்து

உயிர் நெட்டெழுத்துக்கள்	7	[ஆ, ஈ போன்றவை]
ஈகார உயிர் மெய்	18	[கீ, சீ, பீ, போன்றவை]
ஊகார உயிர் மெய்	18	[கூ, சூ, னூ, போன்றவை]
ஓகார உயிர் மெய்	18	[கோ, சோ, தோ போன்றவை]
	61	

ஆக 61 வரிவடிவங்கள் காலின் துணையால் அச்சுக்கோப்பிலிருந்து விடுபடுகின்றன. மீதம் 70 வரிவடிவங்களே உள்ளன.

இந்தக் காலின் துணையினால் ஏற்படுகின்ற ஒரு மாற்றம் அச்சகத்தைப் பொறுத்தமட்டில் பெரும் வெற்றியே.

தட்டெழுத்துப்பொறி:

தட்டெழுத்துப் பொறியைப் பொறுத்தமட்டில் ஊகாரமாகிய கூ, சூ, பூ போன்ற 18 எழுத்துகளும் உயிர் நெட்டெழுத்து ஏழுமே விலக்கப்படுகின்றன,

www.thamizham.net - Free E book No 7418

தமிழ்த் தட்டெழுத்துப் பொறியில் மொத்தம் 46 தட்டுக்கம்பிகள் உள்ளன.

அதிலும் லூ, னூ, ணூ, றூ போன்ற எழுத்துகளில் உள்ள கால் அனைத்திற்கும் ஒரே தட்டுக் கம்பியில் அடித்து முடிக்கப்படுவதால் அவை ஐந்தும் போக 13 எழுத்துகளே விலக்கப்படுகின்றன. இஃது ஒரு வெற்றிதான் எனினும் பெரும் வெற்றி என்ற சொல்வதற்கில்லை.

குறளில் புதுமை.

இருப்பினும் மேலே சொன்ன எழுத்துச் சீர்திருத்தத்தைத் தங்குதடையின்றி ஏற்றுக்கொள்வதால் ஓரளவிற்கு வெற்றி கிட்டவே செய்கிறது. இதன்படி ஒரு சில குறளினைக் காண்போம்:

"கெக்கெக்க ராம்பும் பருவத்து மற்றதன்
குத்தெக்க சார்த்த விடத்து"

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"

"ராத்தாட் டவய்க்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
பொக்கும் அதுவிளிந் தற்று"

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று"

மிகுந்த அளவு சீர்திருத்தத்தை விரும்பாவிடினும் இந்த அளவிற்கு ஏற்றுக்கொண்டாலும் தமிழ்மொழி வளமடையும் என்பதே என் கருத்து.

மேலும் புதுமை:

இனி

மேலே காட்டிய ஐந்து உயிரில் பதினெட்டு மெய்களுக்குள்ளாகவே–ஆங்கில மொழி எழுத்துகளைப்போல 24 வரிவடிவ எழுத்துகளுக்குள்ளாக யாவற்றையும் செய்ய முடியும்.

அக்கருத்தைப் படிக்கும்போது, படிப்பவர்களுக்கு வருத்தமோ அருவருப்போ ஏற்படக்கூடாது.

24 வரிவடிவும்
5 குறியீடுகளுமே போதுமானவை

www.thamizham.net - Free E book No 7418

க-முதல் ன வரை	18 உயிர் மெய்
அ-ஔ வரை	5 உயிர்
ஃ-ஆய்தம்	1
	24

குறியீடுகள்:

மெய்ப்புள்ளி	1	[·]
இகர ஓசை விலங்கு	1	[ſ]
உகர ஓசை விலங்கு	1	[¶]
கால் (ா)	1	[ா]
ஒருசுழிக்கொம்பு	1	[ெ]
	5	

இவ்வைந்து குறியீடுகளும் மெய், இகர, உகர, ஆகார, ஈகார, ஊகார, ஏகார, ஓகார ஓசைகளைக் காட்டுவனவாக அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

எப்படி?

க வின் மேல் புள்ளி வைத்தால் மெய் ஆகிறது. (க்)

க வொடு காலைச்சேர்த்தால் ஆகார ஓசை தருகிறது. (கா)

க வின் மேல் சுழியில்லா விலங்கிட்டால் இகர ஓசை தருகிறது. (கி)

அதனொடு காலைச்சேர்த்தால் ஈகார ஓசை தருகிறது. (கீ)

க வொடு சுழிகொண்ட விலங்கிட்டால் "கீ" என உகர ஓசையாகக் கொள்ளவேண்டும். (கு)

அதனொடு "கீா" காலைச் சேர்த்தால் ஊகார ஓசையாகக் கொள்ள வேண்டும் (கூ)

க வின் முன்னால் ஒருசுழிக்கொம்பு பெற்றால் எகர ஓசை பெறுதல் வேண்டும். "கெ"

அதனொடு கால் பெற்றால் ஏகார ஓசையாகக் கொள்ளவேண்டும். "கொ" (கே).

www.thamizham.net - Free E book No 7418

க வின் முன்னால் இரண்டு ஒருசுழிக்கொம்பு பெற்றால் ஒகர ஓசை தருதல் வேண்டும். ("ெகெ" (கொ)

அதனோடு கால் சேர்த்தால் ஓகார ஓசை கொடுத்து ஒலிக்க வேண்டும். "ெகொ" (கோ)

ஈகார ஓசை உகர ஓசையாக மாறுதல்:

இதனால் இன்றைய வரிவடிவில் ஈகார ஓசை பெறுகின்ற எழுத்துகள் எல்லாம் உகர ஓசையாக (குறில்) மாற்றப்படுகின்றன.

ஏன் எனில் நெடுமையை உணர்த்த நாம் முன்னமே "காலின்" துணையைக் கொண்டுவிட்டோம். எனவே "ு" சுழிப்போடு கூடிய மேல்விலங்கிற்கு வேலையில்லை; இடமில்லை.

கடினமில்லை:

எப்போது கால் (ா) ஈகாரத்தின் ஓசையைப் பிடித்துக்கொண்டதோ (கிாரி–கீரி) அப்போது இது புதிதாக உகர ஓசைக்கென ஆக்கப்பட்ட ஒரு குறியீடாக மனத்தில் கொள்ளுங்கள். இதில் ஒன்றும் கடினமில்லை.

க.—அகர ஓசை

கி.—இகர ஓசை

கீ.—உகர ஓசை (கு)

பழக்கத்திற்கு அடிமை:

இன்று கீ என்று சொல்லிப் பழக்கப்பட்டு விட்டதால் அதனைக் 'கு' என்று சொல்ல வராமல் இருக்கலாம்; அல்லது வேண்டா வெறுப்பாக இருக்கலாம். நகைப்பிற்கிடமானது என்று எண்ணுவதற்குரியதாக இருக்கலாம். இருப்பினும் வளரும் தலைமுறைக்கு "கீ" என்ற வரிவடிவினை "கு" என்று கூறி, "கீா" என்பதனை அதன் நெடுமை "கூ" என்று கூறிப்பாருங்கள். அது பழக்கத்திற்கு மிக எளிதில், மிக விரைவாய் வந்துவிடும்.

சிக்கல் நிறைந்த உகர எழுத்து:

தமிழ்மொழி எழுத்துகளில் மிகுந்த சிக்கல்களையும் வேறுபாடுகளையும் தரும் எழுத்துகள் உகர ஓசையையுடைய கு, சு, டு, து, பு, று, என்பன போன்ற குறுமையும் நெடுமையும் தாம். மற்ற இகர, ஈகார, எகர, ஏகார, ஒகர, ஓகார எழுத்துகள் எல்லாம் சில குறியீடு

www.thamizham.net - Free E book No 7418

களை முன்னோ பின்னோ பெற்று வரிவடிவம் பெறுகின்றன. எனவே அவைகளைக் குறிக்கத் தட்டெழுத்துப் பொறியில் தனித்தனி வரிவடிவங்கள் தேவையில்லை.

ஆனால் உகர ஊகார ஓசைகளுக்குத் தனித்தனி தட்டுக்கம்பிகளும் வடிவங்களும் அமைத்தே ஆக வேண்டும். ஆகவேதான் பெருஞ்சிக்கலும் இடர்ப்பாடும் நேருகின்றன.

மேலே சொன்ன என் கருத்துப்படி ஈகார ஓசைக்கு இப்போது நாம் வழங்குகின்ற குறியீட்டை உகர ஓசைக்கு உரியதாக ஆக்கிக் கொண்டால் 24 எழுத்துகளிலும் ஐந்து (5) குறியீடுகளிலும் தமிழ் எழுத்துகளின் வரிவடிவம் குறைக்கப்பட்டுவிட்டது. இஃது ஆங்கிலத் தட்டெழுத்துப் பொறியில் இருப்பதைக் காட்டிலும் எல்லாவகையிலும் குறைந்த வரிசைகளையே பெறுகின்றது.

தட்டெழுத்துக்கருவியில் சிக்கனம்:

ஆங்கிலத் தட்டெழுத்துக்கருவி 44 விசைகளையும்
தமிழ்த் தட்டெழுத்துக்கருவி 46 விசைகளையும் கொண்டுள்ளன.

இப் புதிய முறையில்

1.	உயிர்	5
2.	அகர உயிர்மெய்	18
3.	மெய்ப்புள்ளி	1
4,	ஒருசுழிக்கொம்பு	1
5.	இகர விலங்கு	1
6.	உகர விலங்கு	1
7.	கால் (ா)	1
8.	எண்	10
9.	குறிகள்	20
10.	ஆய்தம்	1
	மொத்தம்	59

ஒரு விரலுக்கு இரண்டு எழுத்துகள் வீதம் அமைத்தால் 30 தட்டுக் கம்பிகளுக்குள்ளே முடிந்து விடுகிறது.

www.thamizham.net - Free E book No 7418

இஃது ஆங்கிலத்தட்டெழுத்துப் பொறிக் கைவிசைகளைக்காட்டினும் 14 குறைவதால் மிக எளிமையாகவும் விரைவாகவும் செயற்பட ஏதுவாகும்.

எனவேதான் இதனினும் யாரும் இனிச் சுருக்க முடியாது என்று கூறினேன். இனி உகர ஊகார ஓசைகளுக்குத் திரு. தெ. பொ. மீ அவர்கள் கூறியதுபோல் ¬, ூ என்ற குறியீடுகளைக் க, ச என்று அகரமேறிய உயிர்களில் கொள்வோம் என்றால் குறியீடுகள் மிகுதியாகிக்கொண்டே போகின்றனவேயன்றி குறைந்தபாடில்லை.

மேலும் சமசுகிருதம் தமிழின்மீது ஆளுமை செலுத்தும் என்ற ஐயவுணர்வு தமிழர்களுக்கு இருக்கும்போது அக்குறிகளைக் கடன் வாங்கித் தமிழ் எழுத்துகளுக்கு உயிர்கொடுக்க வேண்டும் என்ற தேவையே இல்லை. தமிழர்களின் உணர்ச்சியைத் தட்டிப்பார்க்கும் நிலைமையும் தேவையில்லை.

தமிழிலே முடியவில்லை என்றால் அன்றோ கடன்வாங்க முற்படுதல் வேண்டும்?

எனவே இதுகாறும் கூறியவற்றால்

உயிர் —5
மெய் —18
குறியீடுகள் — 5
ஆய்தம் — 1

ஆகியவற்றாலேயே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அமைத்துவிட முடியும் என்று காட்டியிருக்கின்றேன்.

துணிவு வேண்டும்:

முழுக்கமுழுக்க இப்போது ஈகார ஓசைதரும் வரிவடிவத்தைத் துணிந்து உகர ஓசையாக ஒலிவடிவு கொடுக்கவேண்டும் என்று கூறியிருக்கின்றேன். தமிழ் உலகம் சீற்றம் கொள்ளாமல் எண்ணினால் அன்றி, சீர்திருத்தத்தைக் காணுதல் அரிதாகும். அதன் வழியில் மாறிய வடிவங்களை மீண்டும் ஒரு முறை பாருங்கள்.

உயிர்: அ, அா, இ, இா, உ, உா, எ, எா, ஏ, ஏா, அய், அவ், ஃ

www.thamizham.net - Free E book No 7418

உயிர்மெய்:

குறில்	நெடில்
க	கா—அகர ஓசை
கி	கிா—இகர ஓசை
கீ(கு)	கீா(கூ) உகர ஓசை
கெ	கொ(கே) எகர ஓசை
கெெ(கொ)	கெொ ஒகர ஓசை

இவ்வாறே மற்றைய மெய்களோடும் புணர்த்துப் பெருக்கிக்கொள்க.

செம்மைப்பாடு:

இதனால் தெரிந்துகொள்ள வேண்டிய வரிவடிவம் இருபத்துநான்கே.

உயிரில் 5 (உண்மையில் க, கி, கீ [கு] என்ற மூன்றே.)
மெய்யில் 18
ஆய்தம் 1

24

குறியீடுகள் (.) ெ, ി, ൗ, ா ஆகிய ஐந்தே.

எனவே இருபத்தேழே வரிவடிவத்திற்குள் தமிழ் எழுத்துகளின் சீர்திருத்தம் செம்மைப் படுத்தப்பட்டுவிடுகிறது என்பதை உணர வேண்டும்.

என்வழியில் குறள்:

இதனடிப்படையில் ஓரிரு குறளினைக் காண்போம்.

"கெெக்கெெக்க கீாம்பீம் பரீவத்தீ மற்றதன்
கீத்தெெக்க சிார்த்த விடத்தீ"

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"

"கீாத்தாட் டவய்க் கீழாத் தற்றொ பெருஞ்செல்வம்
கெொக்கீம் அதீவிளிந் தற்றீ"

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று"

மேற்காட்டியே வரிவடிவ முறையே தமிழக மக்களுக்கு அவ்வ விரைவில் செரிமானம ஆகாது என்பதை அறிவேன்.

www.thamizham.net - Free E book No 7418

இருப்பினும் திருவாளர் புலவர் குழந்தை காட்டிய முறைக்கும், திருவாளர் குற்றாலம் அவர்கள் காட்டிய முறைக்கும் திருவாளர் திருஞானசம்பந்தன், திரு. தெ பொ. மீ. அவர்கள் ஆகியோர் மாறுபட்டுக் காட்டிய முறைக்கும் நான் தமிழ் வடிவத்திலிருந்து வெகுதொலை விலகிச் செல்லாமல் இருப்பதில் ஒரு மகிழ்ச்சி.

இருப்பதையே மாற்றியுள்ளேன்:

மேலும் இருக்கின்ற எழுத்துகளை வைத்துக்கொண்டே செய்துள்ளமை அதனிலும் மகிழ்ச்சி. மேலும் ஒரு புதிய கருத்தைக் கடைசியாகக் கூற விரும்புகின்றேன். தமிழின் நெடுமையை உணர்த்தக் காலின் (ா) துணையை நாடச் சொன்னேன். அதனால் ஏற்படும் பல்வேறு வகையான பயன்களையும் எடுத்துக் கூறினேன். காலுக்குப் பதிலாக வேறொரு முறையினையும் கொள்ளலாம். கணிதத்தில் இரட்டிப்பு மடங்கினைக் காட்ட அவ்வெண்களின் மேலே 2 என்ற எண்ணினை இடுவது உண்டல்லவா? அதுபோலவே குற்றெழுத்துகளின் நெடுமையை உணர்த்துகின்ற இடங்களில் அதன்மேலே 2 என்ற எண்ணைப் போட்டுவிட்டால் அக்குறில் நெடுமையாகிவிடுகிறது.

2 என்னும் எண்ணுள்ள குறில்களைப் படிக்கும்போது நெடுமையாகவே நாம் ஒலித்துப் பழகிக்கொள்ள வேண்டும். இதனாலும் பல குறியீடுகள் விலக்கப்படுவதும் தமிழுக்குப் பயன் தருவதுமான செயல் நடைபெறுகிறது.

எடுத்துக்காட்டாக

அ2டு—ஆடு
வி2டு—வீடு
உ2ர்—ஊர்
எ2ர்—ஏர்

என்பன போன்று அமைக்கலாம். அறிஞருலகம் ஆழ்ந்தெண்ண வேண்டுகிறேன். இங்கே எழுத்துகள் சிதையவில்லை. குறியீடுகளே விலகி எண்ணைப்பெறுகின்றன. இரு என்பதைஉணரவேண்டுகிறேன்

எண்ணில் குறள்:

"ய2த2னும் ந2ட2ம2ல் உ2ர2ம2ல் என்றொருவன்
ச2ந்துணையும் கல்ல2த வ2று"

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"
"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"
"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

இவை யாப்பிலக்கணத்திற்கும் பொருந்திவரும் உண்மையையும் அறிதல் வேண்டும். இப்முறையினுலும் ஆகார நெடுமை, ஈகார நெடுமை, ஊகார நெடுமை, ஏகார நெடுமை, ஓகார நெடுமை எழுத்துகளாகிய 20 நெட்டெழுத்துகளின் வரிவடிவம் நீங்குகின்றது.

அதனோடு மட்டுமல்லாமல் குறியீடுகளில் காலும் (ா) ஈகாரக் குறியீடும் ("ீ")

பழைய முறையில் ஊகாரக் கீழ்விலங்குகளும் (யூ, சூ, பூ போன்றவை)

ஏகார, ஓகார இருசுழிக்கொம்பும் (ே)

நீங்கி விடுகின்றன, என்பதனை அறிந்துகொள்க.

இலக்கியத்தைக் கணிதமாக்கும் முறையல்ல இது. எனினும் சுருக்கம் என்னும் முறையில் கூறப்படும் கருத்துகளே. உங்கள் எண்ணத்துக்கு வேலை தந்துள்ளேன். அறிஞர் பெருமக்களே! தமிழ் அன்பர்களே! குறை நிறைகளைக் கூறுங்கள். மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன்.

முடிவுரை:

என் முடிவினைவிடச் சிறந்த, தமிழ்மரபு கெடாத ஒரு முடிவினை யாரேனும் சொல்ல முடியும் என்ருல் வரவேற்கிறேன்.
முயன்று பாருங்கள்.

தென்மொழித் தொகுப்பு

தென்மொழி சுவடி-6 தொகுப்பு விற்பனைக்கு அணியமாய் உள்ளது.
அரிய, இனிய தனித்தமிழ்க் களஞ்சியம்!
அறிவியல் தொகுப்பு!
ஒவ்வொன்றும் பதிவஞ்சல் செலவுடன் உருபா. 12—00
குறைந்த படிகளே கையயம் உள்ளன.
தேவைக்கு முன்னதாகவே எழுதுங்கள்!
—அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7418

தென்மொழிக்கு நன்கொடை.

28-11-68 முதல் 11-1-69 முடிய, தென்மொழி வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்களுக்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

		உருபா	காசு
1.	திரு. சி. அரங்கநாதன், தலைமையாசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, மேலைக்குடியிருப்பு	5	00
2.	திரு. பா. கலியபெருமாள் ஆசிரியர், ஷை	2	00
3.	திரு. க. த. சந்திரகாசன், ஷை ஷை	2	00
4.	திரு. அப்பாசாமி, ஏவலர் ஷை	1	00
5.	திரு. கணபதி ஷை ஷை	1	00
6.	திரு. வி. சிங்காரம், தலைமையாசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, கழுவந்தோண்டி.	3	00
7.	திரு. க. சுப்பிரமணியன், ஆசிரியர், ஷை	1	00
8.	திரு. மா. இரத்தினம், ஷை ஷை	1	00
9.	திரு. அ. கலியபெருமாள் ஷை ஷை	1	00
10.	திரு. கோ ஆறுமுகம் ஷை ஷை	1	00
11.	திரு. ந. தம்புசாமி, தலைமையாசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, இளமங்கலம்.	3	00
12.	திரு. து. பிச்சைப்பிள்ளை, இடையாறு	3	00
13.	திரு. இரா. சின்னத்தம்பி, தலைமையாசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, செயங்கொண்டம்.	3	00
14.	திரு. கோ. வைத்திலிங்கம், உத்திரக்குடி.	3	00
15.	திரு. வை. பழமலை, தலைமையாசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, முத்துச்சேர்வைமடம்.	5	00
16.	மாணவர்கள். ஊ. ஒ. தொ பள்ளி, மேலைக் குடியிருப்பு.	10	00
17.	தென்மொழியன்பர் சிலர் ஷை	5	00
18.	திரு. நா. சுப்பிரமணியம், தலைமையாசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, மெய்க்காவல்புத்தூர்.	3	00
19.	திரு. நா. இளமாறன், பெகும்பகல்லா (நீலமலை)	0	46
20.	திரு. கல்லை. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி	25	00

அமைச்சர், தென்மொழி

www.thamizham.net - Free E book No 7418

செய்தித்தாள் திட்டம்-ஒரு திருத்தம்!

இவ்விதழில் வெளியிடப் பெற்றுள்ள தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டம்—அறிக்கை 1-இல், இத்திட்டத்தின் செயல்முறைகள் என்னும் தலைப்பில், 3-ஆம் பிரிவின் முதற்றொடரைக் கீழ் வருமாறு திருத்திப் படிக்கவும்.

"பங்கினர் அனைவரும் திட்டத்தின் பொது உறுப்பினர்களாகவும், நூறு உருபாப் பங்கினரில் நூற்றுள் ஒருவரும், ஐந்நூறு உருபாப் பங்கினரில் பத்துள் ஒருவரும், ஆயிர் உருபாப் பங்கினருள் ஐந்துள் ஒருவரும் செய்தித்தாள் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஒப்போலை வழித் தேர்ந்தெடுக்கப்பெறுவர்."

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

உலகத் தமிழ்க் கழக மாநாடு

வருகின்ற சிலை 5, 6 (திசம்பர் 20, 21) காரி, ஞாயிறு ஆகிய நாட்களில், உலகத் தமிழ்க் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழாவையும், திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழாவையும், மொழிமுதறிஞர் பாவாணர் அவர்களின் "திருக்குறள் தமிழ் மரபுரை" வெளியீட்டு விழாவையும் ஒருங்கே இணைத்துக் கொண்டாடுகின்ற உ. த. க. மாநாடு முகவை மாவட்டத்தில் கூடவிருக்கின்றது.

தமிழன்பர்கள் அனைவரும் தங்கள் தங்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் அம்மாநாட்டிற் கலந்துகொள்ள வேண்டிக்கொள்கின்றோம்.

மாநாட்டின் முழுவிளக்கமும் அடுத்துவரும் இதழ்களில் அறிவிக்கப்படும்.

மொழிப் பேரறிஞர்

ஞா. தேவநேயப் பாவாணரின்

திருக்குறள் தமிழ் மரபுரை

அச்சாகிக் கொண்டுள்ளது.

திசம்பரில் நடைபெறும் உ. த. க. மாநாட்டில் வெளியீட்டுவிழா நடைபெறும்.

விரைவில் வெளிவரவிருக்கின்றன!

துரை-மாணிக்கம் எழுதிய

- சிறுபாவியக் கொத்து
- கனிச்சாறு (முதல்தொகுதி)

வெளியீடு பற்றிய முழு விளக்கமும் விரைவில் அறிவிக்கப்பெறும்.

www.thamizham.net - Free E book No 7418

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்: உ. த. க. 8/2000

கீழ்க்காணும் ஊர்களிலும் நகரங்களிலும் உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் தொடங்கப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள அன்பர்கள் விரும்பின், அவற்றில் உறுப்பினர் ஆகி, நாட்டுத் தொண்டும் மொழிப்பணியும் புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

௧. தென்னார்க்காடு மாவட்டம்.

திருப்பாலைப்பந்தல் ஊர்க்கிளை: தொடக்கம்: மடங்கல் ௧௪. தலைவர்: திரு. அ. மணி; செயலர்: புலவர் திரு. அ. இளமுருகு; பொருளர்: திரு. நா. ஞானமணி.

௨. தஞ்சை மாவட்டம்.

(அ) சாமிமலை நகரக்கிளை: தொடக்கம்: கடகம் ௨௪. தலைவர்: திரு. அ. ச. கணேசன், அறி. இ., ப. இ; செயலர்: திரு. சி. நடராசன்; பொருளர்: திரு. தங்க-இராசேந்திரன்.

(ஆ) வேப்பஞ்சேரி ஊர்க்கிளை: தொடக்கம்: ஆடவை—௮ தலைவர்: திரு. சா. அமிர்தலிங்கம்; செயலர்: திரு. கா. இளங்கோ; (இயற்கை எய்தினர். வேறு செயலர் தேர்ந்தெடுக்கப்பெறுதல் வேண்டும்.) பொருளர்: திரு. இர. வங்கவனம்.

௩. நெல்லை மாவட்டம்.

பாளையங்கோட்டை நகரக்கிளை: தொடக்கம்: 13-7-69. தலைவர்: திரு. தமிழ்வென்றி; செயலர்: திரு. புது. செயப்பிரகாசு நாராயணன்; பொருளர்: திரு. ஏசுஅரசு சாமுவேல்.

௪. முகவை மாவட்டம்.

உப்பூர் ஊர்க்கிளை: தொடக்கம்: 23-4-69. தலைவர்: திரு. ந. குறளன்பன்; செயலர்: திரு. இரா. முத்துமன்னன்; பொருளர்: திரு. அதி. அரசன்.

www.thamizham.net - Free E book No 7418

௬. புதுவை மாநிலம்.

தவளக்குப்பம் கிளை: தொடக்கவிழா புதுவை மாநில அமைப்பாளர் திரு. த. வளங்கோ தலைமையில் கன்னி—௭. (3–10–69) ஆம் பக்கல் நடைபெற்றது. தலைவர்: திரு. ம. மணவாளன்; செயலாளர்: திரு. சி. இராமலிங்கம்; பொருளாளர்: திரு. கி. ஆதிமூலம் ஆகியோர் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

௬. பிற உ. த. க. செய்திகள்.

1. தஞ்சைமாவட்ட உ. த. க. வேப்பஞ்சேரிக் கிளையின் செயலர்: திரு. கா. இளங்கோ அவர்கள் மடங்கல் ௨௫ (10-9-69) அன்று எதிர்பாரா வகையில் இயற்கை யெய்தியது அறிந்து பெரிதும் வருந்துகின்றோம். அன்பர் பிரிவினால் துயருறும் பெற்றோர்க்கும் நண்பர்கட்கும் உறவினர்களுக்கும் உ. த. க. அன்பர்களுக்கும் நமது கழகச் சார்பில் ஆழ்ந்த இரக்கம் தெரிவித்து ஆறுதல் கூறிக்கொள்கிறோம்.

2. தெ. ஆ. மாவட்ட உ. த. க நெய்வேலிக் கிளைக்கழகம் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு நினைவாக மாணவ, மாணவியர், பொது மக்கள் இவர்களுக்காகத் திருக்குறள் ஒப்பித்தல், கட்டுரை வரைதல், சொற்பொழிவாற்றுதல் ஆகிய போட்டிகளை நடத்தியது. போட்டிகள் 15-9-69, 21-9-69 ஆகிய நாட்களில் நெய்வேலி வட்டம் 17-இல் உள்ள பொறியியலாளர் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றன. அடுத்து நடைபெற விருக்கும் ஈராயிரம் ஆண்டுவிழாவில் பரிசுகள் வழங்கப் பெற விருக்கின்றன.

3. முகவை மாவட்டம் வண்ணாங்குண்டு கிளைக்கழகம் 20-9-69-இல் அறிஞர் அண்ணாவின் 60-ஆவது நிறைவு விழாவைக் கொண்டாடியது. விழா திரு. அ. மு. இராமமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கடலாடி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அலங்காரம் அவர்களும் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. கோ. பிச்சை அவர்களும் கலந்துகொண்ட இவ்விழாவில் அன்பர் பலரும் சொற்பொழிவாற்றினர்.

அறிக்கை எண்: உ. த. க. 7/2000

1. பெரும்பாலான பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் திசம்பரில் தேர்வு நடைபெற விருக்கின்றமையால், அத்திங்கள் இறுதியில் நடைபெறவிருக்கும் உ. த. க. மாநாட்டை ஓரிரு கிழமைகள் தள்ளி வைக்கக் கேட்டு மாணவர்கள், ஆசிரியர்கள் பலரும் எழுதியுள்ளனர். இது தொடர்பாகத் தலைவரையும் பிற மாநாட்டு அமைப்பாளர்களையும் கலந்துகொண்டபின் அதுபற்றித்தெளிவாக அறிவிக்கப்பெறும்.

2. உ. த. க. கிளைக் கழகங்கள் சிலவற்றிலிருந்து, அவற்றின் உறுப்பினர் சிலரைப் பற்றிய குற்றச்சாட்டுகளும் அவற்றின் அடிப்

www.thamizham.net - Free E book No 7418

படையில் அவர்கள்மேல் நடவடிக்கைகள் எடுக்கக் கோரிக்கை மடல்களும் வந்துகொண்டிருக்கின்றன. உறுப்பினர்களைச் சேர்க்கும் நிலையில் நாம் சிறிது எச்சரிக்கையுடன் இருந்திருந்தால் பின்னர் அவர் மேல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய தேவையில்லாமலிருக்கும். எனவே ஆங்காங்குள்ள கிளைக் கழகங்கள் இத்துறையில் போதிய கவனம் செலுத்தக் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் நம் கழகம் பிற கட்சிகள் போலன்றி, சில மெய்க்கொள்கைகளின் செயற்பாட்டிற்காகவே அமைந்ததாகலின் தெளிவான கொள்கைப் பிடிப்பும் நம்பிக்கையும் உள்ள அன்பர்களைமட்டும் உறுப்பினராக்கக் கேட்டுக்கொள்கின்றோம்

3. வரும் திசம்பருக்குள் ஒவ்வொரு மாவட்டமும் குறைந்தது இருபது கிளைக்கழகங்களையும் இரண்டு வட்டக் கழகங்களையும் தோற்றுவிப்பதில் பெருமுயற்சி எடுத்துக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம். செங்கழுநீர்ப்பட்டு மாவட்டத்திற்கும் மலையாளத்திற்கும் இன்னும் மாவட்ட அமைப்பாளர்கள் அமர்த்தப்பெறவில்லை. செயற்குரிய திறமும் தகுதியும் வாய்ந்த தக்கார் பெயர்களை அன்பர்கள் அறிவிக்கக் கேட்டுக்கொள்கின்றோம்.

4, கிளைக்கழகம் தொடங்கவிரும்பித் தமிழன்பர்பலர் மாவட்டத் தலைவர்களிடமிருந்து உறுப்பினர், நன்கொடைப் பற்றுமுறிகள், சேர்ப்புப் படிவங்களைப் பெற்றுக்கொண்டபின், நடவடிக்கை ஒன்றும் எடுக்காமலும் எழுதும் மடல்களுக்கு விடையிறுக்காமலும் உள்ளனர் என்று மாவட்டத்தலைவர் சிலர் வருத்தத்துடன் அறிவித்துள்ளனர். அத்தகைய அன்பர்களை விரைவில் நடவடிக்கையில் ஈடுபடக் கேட்டுக்கொள்வதுடன், அவ்வாறு இயலவில்லையானால் பற்றுமுறிகளையும் படிவங்களையும் மாவட்ட அமைப்பாளர்களுக்கே திருப்பி விடுக்கும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

மே/பா. தென்மொழி,
கடலூர்-1.

பெருஞ்சித்திரன்
பொதுச்செயலாளர், உ. த. க.

தமிழறிஞர்க்கு வேண்டுகோள்

"தமிழின் பழைய வரிவடிவும் அதன் புதிய ஒலிவடிவும்"
—என்னும் தலைப்பில் பேராசிரியர் மு. உலகநாதன் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தக் கட்டுரைக் கருத்து, தென்மொழியின் கருத்தாகாது. எத்துறையும் தற்கால அறிவியன் முறையில் ஆயப்பெற்றுத் தேவையாயின் புதுமையையும் அல்லாக்கால் பழைமையையும் போற்றல் வேண்டும் என்னும் தென்மொழிக் கருத்தினடிப்படையில் வெளியிடப்பெற்ற கட்டுரை அது. தமிழறிஞர்கள் அக்கட்டுரைக்கருத்துகள் ஏற்கத்தகாவெனின் மறுப்புக் கட்டுரைகள் எழுதி விடுக்கலாம். அளவை முறையான் எழுதப்பெறும் அறிவியல் தருக்கக் கட்டுரைகள் அனைத்தும் போற்றிக் கொள்ளப்பெறும். —ஆசிரியர்.

www.thamizham.net - Free E book No 7418

அவ்வழியையும் கடைப்பிடித்தல் தவறாகாது என்பது என்கருத்து. என்றும் தென்மொழிக்கு என் துணை உண்டு.

—இளந்திரையன், பாப்பநாயக்கன் பாளையம், கோவை

147: அன்புமிகு தமிழ் வயவ! ஆசிரியப் பெரும! பண்புமிகு தமிழகம் இன்று நண்பு இழந்து, எதிலும் நாட்டம் இன்றி ஊட்டம் குன்றி, இருப்பதை நாம் அறிவோம். தங்களின் உரையைப் படித்தும் தெளியாத குருட்டு ஊமைகள் இருப்பார்களானால் யாதும் மொழியற்க. அவர்கள் சிவிகை பொறுத்தாரோடு ஊரும் சிதலைகள். நெற்பயிரூடே வளரும் ஆரியப் புற்களையைக் களைதல் அரிது; விளைவில் தான் தெளியலாம்.

இனி நாம் வினைப்பாட்டில் ஈடுபட வேண்டும். வினைப்பாடு என்கின்ற பொழுது வேண்டாதவர் வருவர்; கயவர் புகுவர். துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை என்பதை அறிவோம் என்பிடை நரம்பாக, உயிரிடை உலவும் தமிழுக்கு ஏற்ற தமிழ் முன் தாங்கள் என்பதை அறியாத தமிழர் இலர். "நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே ஒட்டாரை ஒட்டிக் கொளல் என்பதையும், பகை நட்பாம் காலம் வருங்கால் முகநட்டு அகநட்பு ஒரீஇ விடல் என்பது போன்ற வள்ளுவ வழியையும் நாம் நன்கு உணர்வோம். இங்குத் தடைக்கற்கள் நிறைய உண்டு; தடந்தோளும் உண்டு. இருப்பினும் எதிலும் முட்டி மோதிக்கொள்வதைவிடத் தட்டி வினையை முடித்தலே தக்கது என்பது அண்ணா காட்டிய அறுவழி.

—இரா. பெரியண்ணன்; புதுப்பட்டி; நாமகிரிப்பேட்டை.

148: அன்புள்ள ஆசிரியர்க்கு வணக்கம் பல. என்னை ஓர் உண்மைத் தமிழனாக்கிய பெருமை தங்களையே சாரும். எனவே, என் நன்றியை முழுமனத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் கூறும் ஒவ்வொரு கருத்தும் ஓராயிரம் கோடி உருபாக்களுக்குச் சமமானதாகும். ஓர் அன்பர் எழுதியபடி தங்களது முயற்சி என்றும் வீணாகாது. அவற்றை நிறைவேற்றத் தென்மொழி உறுப்பினர் ஒவ்வொருவரும் உழைப்பர் என்பது கல்மேல் எழுத்தாகும். ஆனாலும் தெரிந்தோ, தெரியாமலோ எத்தனையோ பேர் தென்மொழிக்கு எதிராகச் செயல் புரிகின்றனர். ஓர் எடுத்துக்காட்டு. எங்கள் கல்லூரியின் இந்த ஆண்டுக்கான குறிப்பேட்டில் (Calender) பட்ட வகுப்பு மாணவர்களுக்கான தமிழ், இலக்கணப்பகுதி முற்றிலும் ஆங்கிலத்தில் நேரடியாக எழுதப்பெற்றுப் பெரும் குழப்பம் செய்யப்பட்டுள்ளது. தமிழாசிரியர் ஒருவரிடம் இதுபற்றிக் கேட்டதற்கு 'நாங்களும் இதைத்தான் வலியுறுத்தி வருகிறோம். மதுரைப் பல்கலைக்கழகத்தாரால் செய்யப்பட்டது இது" என்று கூறிவிட்டார். குறிப்பேட்டை உடன் அனுப்பியுள்ளேன். அதில் 31-ஆம் பக்கத்தில் தமிழ் இலக்கணப்பகுதி வெளியிடப்பட்டுள்ளது.

—சி. செந்தமிழரசு, ஆறுமுகம் சீதையம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்.

149: அன்புள்ள ஐயா, வணக்கம். தென்மொழியை மாதந்தோறும் தவறாமல் ஆவலுடன் படித்துக்கொண்டு வரும் நேயர்களில் நானும் ஒருவன். கடந்த எட்டு மாதங்களாகத்தான் தென்மொழியை

(அடுத்தபக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7418

என்றால் தவறாமல் படித்துக்கொண்டு வர முடிகின்றது. அதற்குமுன் னால் தென்மொழி இங்கு (சென்னையில்) கிடைக்காத காரணத்தினால் படிக்க முடியாமல் போய்விட்டது. தென்மொழியில் தங்களால் எழு தப்படுகின்ற ஆசிரியவுரை ஒவ்வொன்றும் என்னை மிகவும் கவர்ந்து விடுகின்றது. தங்களுடைய ஆசிரியவுரைகளைப் படித்த பிறகு தீவிரத் தமிழ்ப்பற்று உள்ளவனாக மாறிவிட்டேன். தமிழர், தமிழ்நாடு, தமிழ் மொழி, தமிழர் பண்பாடு வாழ வளர மேலும் மேலும் வளர விரும்பு கின்றேன். அதற்குத் தென்மொழியை என்னுடைய வழிகாட்டியாகக் கருதுகின்றேன். தென்மொழி காட்டும் நல் வழியிலேயே நான் நடந்துகொள்வேன். இஃது உறுதி.

—பூ. க. செல்வமணி, சென்னை-10.

150: பெருந்தகையீர், தென்மொழிவாயிலாகத் தாங்கள்செய்து வரும் செயற்கரிய தொண்டு எம்மனோர் எளிய நெஞ்சங்களைப் புல்லரிக் கச் செய்கின்றது. பொருளின்மை காரணியமாக ஏற்படுகின்ற இடர்ப் பாடுகளை எண்ணாது தொல்புகழ் நந்தமிழர் சிறப்பினை அறியாதவரும் அறிந்தும் அறியார்க்கு எடுத்துரைக்கும் திறனில்லாரும், துணி வில்லாரும் தம்மை நன்குணரச் செய்யும் பொருட்டுத் தாங்கள் ஏடு வீறுகொண்டு வெளிவருதல் கண்டு உவகை மிகவெய்துகின்றனம்.

—எழில்மாறன், நரிக்கல்பட்டி, பழநி.

151: பெரும்பாலோர் தென்மொழிக்கு ஆண்டுக்கட்டணம் உருபா 9-00 விடுக்க இயலாமல் பெருந் துன்பத்திற்கு இலக்காகி இருக்கிறார்கள். தங்களுக்கு எவ்வகையில் பொருள்முடை ஏற்பட் டுள்ளதோ அங்ஙனமே நம் அன்பர்களில் பலருக்கும் பொருள்முடை ஏற்பட்டிருப்பதில் வியப்பில்லை. எனவே, தென்மொழிக்கு அரையாண் டுக் கட்டணம் கிடையாது என்ற நிலையைத் தவிர்த்து, அரையாண் டுக் கட்டணம் உண்டு என்ற நிலையை ஏற்படுத்துவீர்களானால் பலருக்குப் பலவகையில் ஏந்தாக இருக்கும் என்று யான் எண்ணுகி றேன். இந்நிலையை ஏற்படுத்துவதால் ஒரு சிலரேனும் உறுப்பினர் களாகக்கூடும் என்று எண்ணி இவ்வேண்டுகோளை விடுக்கிறேன். இவ்வேண்டுகோள் தங்களுக்கு ஏற்புடைத்தாயின் ஏற்க. இல்லை யெனின் கவலற்க —அ. மாயிறைவன், கண்டமாத்தான்.

152. பாடிவரும் தமிழ்ச்சிட்டும், ஆடிவரும் தென்மொழியும், உள்ளத்தில் உறைந்து கிடக்கின்ற உணர்ச்சியைப் பொங்கச் செய் கின்றன. உவகைபுறுகின்ற உள்ளம், உங்கட்கிருக்கும் அகப்பகையை நினைத்துத் துணுக்குறுகின்றது. தொடர்ந்து செல்லுங்கள். விழித் தெழுகின்ற மாணவர்கூட்டம், அப்பகையை வெருட்டி ஓட்டிவிடும். நிலைமாறித் தடுமாறுகின்ற எங்கட்குத் தென்மொழியை எவ்வெவ் வாறு விரிவுபடுத்தலாம் என்பதைத் தெரியப்படுத்துங்கள். தங்களின் ஆசிரியவுரை, ஆரியப் பார்ப்பனர்க்கும் அவர்வழிக் கௌடில்யத் தமி ழர்க்கும் சாட்டையடி. தூங்கிக் கிடக்கும் தமிழர்களை— உணர்வற்று எதற்கோ ஏங்கிக்கிடக்கும் தமிழர்களைத் தட்டியெழுப்பி விழிப்புறச் செய்யும் என்பது உறுதி! உறுதி!

—இறைமுருகு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தென்மொழியின் அச்சகம், கடலூர்-1.

www.thamizham.net - Free E book No 7418